மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 – 8 – 56

★

அணு 4

★





காரியந்தான் பெரிது-வீண் வீரியம் அல்ல!

பெரியார் அவர்கள் தம் காலத்திற்குப்பிறகு திராவிடக்கழகத்தையும், திராவிடக் கழகச் சொத்துக்களையும் பாதுகாத்துச் செல்வதற்கு ஆன வாரிசு ஒன்று வேண்டும் என்று கருதியே, தோழியர் மணியம்மையைத் 'திருமணம் என்றபெயரால் ஒரு ஏற்பாடு'செய்து தேர்ந்தெடுத்துக்கொண்டார்என்பது அவராலேயே வெளியிடப்பட்டது. அத்தகைய வாரிசு ஆவதற்குரிய தகுதியும், திறமையும் தோழியர் மணியம்மையார் அவர்களிடந்தான் இருக்கிறது என்பதோடல்லாமல், அவர்களைத்தவிர வேறு யாரையும் தாம் நம்புவதற்கில்லை என்றும் பெரியார் அவர்கள் தெரிவித்தார்.

'திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு' என்பது அவர் பலகாலம் கூறி வந்த சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களுக்கு மாறுபாடான ஒன்று என்பதோடல்லாமல், கழகத்தை நடத்திச்செல்ல தாமே வாரிசுமுறையில் ஆள் தேர்ந்தெடுப்பது சனநாயகப்பண்பிற்கு முரண்பாடானதும், சர்வாதிகாரத்தன்மை கொண்டதும் ஆகும் என்று எண்ணி கழகத்திலிருந்த தூய உள்ளம் படைத்த நல்லவர்கள் எல்லாம் கலங்கினார்கள் ; கண்ணீர் விட்டார்கள் ; ஏற்பாட்டை மாற்றிக்கொள்ளும்படி பெரியாரிடம் கெஞ்சினார்கள் ; வேதனைப்பட்டார்கள் ; வெட்கப்பட்டார்கள்.

இந்த நிலையில் அறிஞர் அண்ணா அவர்கள், அரசியல் வாழ்வைவிட்டே விலகி, ஒதுங்கிவிடுவது என்ற முடிவுக்குவந்து, காஞ்சிபுரம் சென்று தங்கிவிட்டார்கள். கொள்கைப்பற்றுக் கொண்ட பல்லாயிரக் கணக்கான தூயஉள்ளம் படைத்தோர் என்ன செய்வது, ஏதுசெய்வது, எதிர்கால அரசியல் வாழ்வை எப்படி மேற்கொள்வது என்று எண்ணி ஒன்றும் புரியாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். தோழர்கள் என். வி- நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. கோவிந்தசாமி, இரா. நெடுஞ்செழியன் போன்றவர்கள் அண்ணாவிடம் சென்று தங்களுக்கும், பிறர்க்கும் ஏதேனும் பழிபடராப் பாங்குள்ள வழிகாட்டவேண்டும் என்று வற்புறுத்தி விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். நீண்ட நேரத்தயக்கத்திற்குப் பிறகு, எல்லோரும் சேர்ந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நடப்பதற்கான நேரிய வழி ஒன்றுகாண சென்னை வந்தார்கள்.

சென்னையில், பவழக்காரத்தெருவிலுள்ள கட்டிடம் ஒன்றில் முக்கியமான தோழர்கள் அடங்கிய தனிக்கூட்டம் ஒனறு கூடிற்று. அதில் அண்ணாஅவர்கள் எல்லோரும் திராவிடக்கழகத்தைவிட்டு வெளியேறித் தனிக்கழகம் அமைத்துக் கொள்ளலாம் என்றும், அதுதான் அமைதியை நிலைநாட்டுவதற்கும், வளர்ச்சிபெருவதற்கும் ஏற்றவழியாகும் என்றும் கூறினார்கள். அப்பொழுது அண்ணாஅவர்களின் கருத்தையாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பெரியாரின்போக்குகண்டு வெறுப்படைந்துள்ளவர்கள் ஏராளமாக இருப்பதால், திராவிடக் கழகத்தையும், திராவிடக்கழகச் சொத்துக்களையும் வன்முறையிலாகிலும் கைப்பற்றியே ஆகவேண்டும் என்ற கருத்தைத் தோழர்கள் சம்பத், நடராசன், சித்தையன், கோவிந்தசாமி, நெடுஞ்செழியன் மணிமொழியார் போன்ற பலரும் துடிதுடிப்புணர்ச்சியுடன் வற்புறுத்தினார்கள். திராவிடக் கழகத்தைக் கைப்பற்றுவது என்ற முயற்சி வீண்சண்டை சச்சரவுகளிலும் அடிதடிகளிலும் நேரத்தையும், உழைப்பையும், அறிவையும் கழிக்கவேண்டி நேரிடும் என்றும், இரண்டு சாராரையும் அடக்கி ஒடுக்க அரசாங்கத்திற்கு நல்லவாய்ப்புகள் ஏற்பட்டுவிடும் என்றும், மாற்றார்கள் இழித்தும் பழித்தும் ஏளனமாகக்கூற இடம்கிடைக்கும் என்றும், கொள்கைப்பற்றுடையோர் சிறிதுசிறிதாக வெளியேற நேரிடும் என்றும் சொல்லியதோடு, அப்படிப்பட்ட வன்முறைச்செயல்களுக்குத் தாம் தலைமைஏற்க இயலாது என்றும் வேண்டுமானால் சாதாரண உறுப்பினராக இருக்கிறேன் என்றும் சொல்லிவிட்டு அறிஞர் அண்ணாஅவர்கள் மீண்டும் காஞ்சிபுரம் சென்றுவிட்டார்கள்.

இப்படியாக இரண்டு மூன்று திங்கள்கள் எந்த முடிவும் ஏற்படாமல் கழிந்தன. அந்த இரண்டு திங்கள்களில் ஏற்பட்ட அனுபவம், அண்ணாவின் வழியே ஏற்றவழியாகும் என்ற முடிவுக்கு ஏனையோரைக் கொண்டுவந்தது, மீண்டும் அண்ணாவை அவர்கள் நாடி, அண்ணாவின் கருத்தை முழுமனதோடு ஏற்க இசைந்தனர்.

வன்முறைக்குச் சிறிதும் இணங்காமல், காரியந்தான் பெரிதே ஒழிய வீண் வீரியம்அல்ல என்று அறிஞர் அண்ணாஅவர்கள் கொண்ட பெருநோக்கந்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை இன்று செழிப்புற வளர்த்து வருகிறது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 5 ★ (15—8—56) ★ இதழ் 8

கெடுவது காட்டும் குறிகள்

அவனிகண்டு அஞ்சுமளவு, அதிகாரத்தின் உச்சியில் நின்று கொடிகட்டி ஆண்ட அரச பரம்பரையினர், கோலோச்சிய மன்னர்கள் பலர் உலக வரலாற்றில் வந்திருக்கின்றனர். அவர்கள் பார்த்த கடைக்கண் பார்வையிலே, அசைத்த சிறுவிரல் அசைவிலே, படைகள் திரண்டிருக்கின்றன, படையெடுப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த மன்னர் மன்னர்களுக்கு எதிர்நின்றோர் கிடையாது, மறுவார்த்தை பேசியோர் கிடையாது. அவர்கள் இட்டது கட்டளை, சொன்னது தெய்வ வாக்கு. அரச பரம்பரையினர் ஆண்டவனின் பரம்பரையினராகக் கருதப்பட்டகாலம் அது. அதிகாரம்—அதற்கு மக்கள் முழுமனதுடன் அடிமைப்பட்டிருந்த காலம்.

வரலாற்றில் அந்தப்படம் மட்டும்—அந்தக் காலம்மட்டும் சித்தரிக்கப்படவில்லை. அதிகாரத்தின் உச்சநிலையைக்காட்டி, அங்கு நின்று ஆர்பரித்த மன்னர்கள் மக்களால் தள்ளப்பட்டுவிழுந்த பள்ளத்தாக்குகளையும், வரலாறு காட்டுகிறது. அதிகாரத்திலிருந்து காலிடறி விழுபவர்கள், ஆழமான மடுவில் செல்லவேண்டியிருக்கும் என்பதையும் அது காட்டுகிறது. அதிகாரம் உயர்ந்த விதத்தைப்படிக்கும்பொழுது, அது வீழ்ச்சியடைந்த விதத்தையும் நாம் படிக்கிறோம்.

அதிகாரம் மக்கள்தரும் சம்மதம். அது மக்கள் நம்பிக்கையின்மீது எழுகின்றது. மக்களின் நம்பிக்கை தளரும்பொழுது, சம்மதம் திரும்ப வாங்கப்பட்டு விடுகிறது, அப்பொழுது அதிகாரம் அடிப்படையற்ற சுவராக விழுந்து விடுகிறது. மக்களின் நம்பிக்கை, உற்சாகம் வளர்ந்த சமயத்தில் அரசுகள் பேரரசுகளாயிருக்கின்றன, அரசர்கள் மன்னர் மன்னர்களாக கொலுவீற்றிருந்தனர். மக்களின் உற்சாகம் மங்கியதும், பேரரசுகள் சிதறியிருக்கின்றன, கொலுவீற்றிருந்த மன்னன் கொலைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றான். இவை தனிப்பட்ட அரசர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் மட்டுமல்ல, அதிகாரம் வளர்வதற்கும் பின் வீழ்த்துவதற்கான காரணங்களைத்தரும் வரலாற்றுக்குறிப்புகள் ஆகும்.

அதுமட்டுமல்ல, அதிகாரம் வளர்வதற்கு காலம் அதிகமாகுமாம். ஆனால் வளர்ந்த பின் வீழ்ச்சியடைவது மிகச் சுலபமாம். கார்லைல் என்ற ஆங்கில ஆசிரியர், அதிகாரம் வளர்வதை ஒரு மலர் வளர்ந்து வருவதற்கு ஒப்பிட்டார். பதியம் வைத்து, வேர் விட்டு, தனிப்பட்ட செடியாகி, துளிர் விட்டு, மொட்டு தோன்றி, மலர் மலர்வதற்கு பலநாட்கள்—பலவாரங்கள் ஆகிவிடுகின்றன. ஆனால் மலர் தோன்றியதும், ஒரு பொழுதிற்குள் வாடி உதிர்ந்துவிடுகிறது. அதைப்போன்று அதிகாரம் ஒரு நூற்றாண்டில் வளர்ந்து, முழுமலர்ச்சியடைந்து, ஒரு சிலமணி நேரங்களில் மங்கிவிடக்கூடுமாம், கார்லைல் குறிப்பிட்டது, பிரெஞ்சுநாட்டு அரச அதிகாரத்தை—போர்போன் அரசபரம்பரையினரின் ஆட்சி வளர்ச்சியை.

அரசாங்கம் என்றபேச்சு வந்தபொழுது "அரசாங்கமா? நான்தானே அரசாங்கம்!" என்று பதினான்காவது லூயி மன்னன் ஒரு சமயம் கூறினானாம். பக்கத்திலிருந்தவர்கள் வாய்மூடி பேசாமலிருந்தார்களாம்.

"நானேதான் அரசாங்கம்!" பதினாறாவது லூயி இறுமாப்புடன் பேசினான், அது அரச அதிகாரம் வளர்ந்திருந்த அளவைக் காட்டியது. பக்கத்திலிருந்தவர்கள். வாய்மூடி பேசாமலிருந்த போதிலும், காலம் பின்பு அதற்குப் பதில் தராமற் போகவில்லை. பதினான்காவது லூயி மன்னன் ஏறிட்ட பார்வையில் எக்காளமிட்டான். பதினாறாவது லூயி மன்னன் தாழ்ந்த தலையுடன் கொலைக்களத்தில் நின்றான். பல நூற்றாண்டுகளாக வளர்க்கப்பட்ட அதிகாரம் இரண்டு ஆட்சிக்குள் சிதறிவிட்டது.

"நானேதான் அரசாங்கம்!" பதினான்காவது லூயி மன்னன் சொன்னான், தன்னுடைய அதிகாரத்தில் வைத்த பெரு நம்பிக்கையால், தனக்கே அது நிலையானது என்ற எண்ணத்தால், தன்னை அதனின்றும் யாரும் பிரிக்க முடியாது என்ற உறுதிப் பாட்டால். பதினான்காவது லூயி மன்னன் காலத்தில் அந்த வாக்கு பலித்தது, ஆனால் இரண்டாவது

ஆட்சிக்குள், பதினாறுவது லூயி மன்னன் காலத்தில், மன்னன் குரல் மட்டுமல்ல, மக்கள் குரலும் கேட்க ஆரம்பித்துவிட்டது. அதுவே பிரெஞ்சு நாட்டுப் புரட்சி யென்பது வரலாற்றுப் பாடம்.

பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் எவை யெவை? வரலாற்று ஏடுகள் பலப்பல சொல்கின்றன.

வறுமை, வரிக்கொடுமை, சமூகத்தில் ஏற்பட்ட நலிவுகள், பேதங்கள்!

இவைகளால் தூண்டப்பட்டு, புரட்சி மூண்டது உண்மை. ஆனால் வறுமையும், வரிக் கொடுமையும் பிரெஞ்சு நாட்டுக்குப் புதியவை யல்ல, பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்ததைவிட அதிகமான அளவு வறுமை அதற்குமுன் ஓரோர்சமயம் பிரான்சைஅல்லற் படுத்தியிருக்கிறது. சமூகத்தில் வளர்ந்துள்ள ஏற்றத்தாழ்வுகள் பல நூற்றாண்டுகளாக வந்துள்ளவை. வெளித்தோற்றத்தில் மட்டுமல்லாமல், அறிஞர்களாலும், வால்டேர், ரூசோ, டைட்ராயிட் போன்றோர்களாலும் செய்யப்பட்ட அறிவுக்கிளர்ச்சிகளும் முக்கிய காரணங்களாகும். ஆனாலும், அதிகாரத்தை எதிர்த்து மக்கள் எழுந்ததின் காரணங்களை ஆராயவந்த பிரெஞ்சு வரலாற்றாசிரியர் ஒருவர், இந்தக் காரணங்களெல்லாவற்றையும் விட வேறொரு காரணத்தை குறிப்பிடுகிறார். அந்தக் காரணத்தினால்தான் பதினாறுவது லூயி மன்னன் காலத்தில் புரட்சி வெடித்ததென்றும் அவர் கூறுகிறார்.

பதினாறுவது லூயி மன்னன் பட்டத்திற்கு வந்ததும், பிரெஞ்சு நாட்டுப் பொருளாதாரத்தையும், வாழ்க்கையையும் செம்மைப்படுத்துவதென்று அவனும், அவனுக்குக் கிடைத்த ஓரிரு நல்ல மந்திரிகளும் நினைத்தார்கள், சில திட்டங்களும் தீட்டினார்கள். ஆனால் மன்னன் பலவீனனாக இருந்ததால், நல்ல மந்திரிகள் நிலைத்திருக்கவில்லை. தீட்டப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. பல்வேறு காரணங்களால் பிரெஞ்சு நாட்டில் நிலவிய சீர்கேடுகள் திருத்தப்படவில்லை. இதனால் ஏற்பட்ட விபரீத நிலைமை என்னவென்றால், நாட்டின் நலிந்த நிலை நீக்கப்படாததுமட்டுமல்ல, மக்கள் மனதில் ஏற்பட்ட நம்பிக்கை—"நல்ல திட்டங்களைக்கொண்டு வருகிறார்கள், அதனால் நமது துன்பங்களெல்லாம் தீரும் நல்ல பேறு கிடைக்கும்" என மக்கள்கொண்ட நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது. ஒரு அரசு கொடுங்கோல் அரசாகவே நீண்ட காலம் இருந்து வந்தால் அதற்குவரும் ஆபத்தைவிட, நல்ல நம்பிக்கைச் செய்திகளைத் தந்து, மக்கள் மனதில் ஆசைக் கனவுகளை மூட்டிவிட்டு பின்பு ஒன்றுங் கிடையாது என்று கூறினால் மக்களிடை ஏற்படுகிற ஏமாற்றம் இருக்கிறதே அதுதான் பலமடங்கு ஆபத்தானது. பிரெஞ்சு நாட்டுப் புரட்சிக்கான காரணங்களைக் கூறவந்த வரலாற்றாசிரியர் இந்த ஏமாற்றத்தைத் தான் முதலாவதாக வைத்துக் கூறுகிறார்.

"அரச அதிகாரத்துக்குப் பலப்பல கொடுங்கோலர்கள் உண்டாக்கித்தருகிற ஆபத்தைவிட மிகப்பெரிய அளவான ஆபத்து, மக்களுக்கு நம்பிக்கைகளைத் தந்து அவற்றை நிறைவேற்றாமல் விடுகிற நிலைமையால் உண்டாகிறது. பிரெஞ்சு அதிகாரத்தைப்பற்றிச் சுருங்கச் சொல்லவேண்டுமானால், செயலாற்றாத பேச்சு, பொறுப்பு இல்லாத பதவி, கட்டுப்பாடு இல்லாத அதிகாரம் இவைகளைக் குறிப்பிடலாம்."

எந்த மன்னனைத்தேவனென்றும்பிரபுவென்றும் போற்றிப் புகழ்ந்தார்களோ, எந்த அரசின் புகழ்பரவ போர்க்களங்களில் இரத்த ஆறுகளைப்பாய்ச்சி ஆரவாரம் செய்தார்களோ, அதே அரசனை—அதே அரசை மக்கள் எதிர்த்து நிற்கின்றனர், அவர்களுக்குச்சில நம்பிக்கைகள் தரப்பட்டு, அவை நிறைவேற்றப்படாவிட்டால்.

முதலிலிருந்தே "கிடையாது" என்று சொல்லிவந்தால், "அவ்வளவுதான்" என்று ஒருவன் இருந்துவிடுவான் சிலசமயங்களில் வருந்துவான், கண்ணீர் விடுவான்.

ஆனால், "உனக்கு இது நிச்சயமாகக் கிடைக்கும்! கிடைக்கப்போகிறது! இதோ! சற்றுப்பொறு!" என்றெல்லாம் ஆசை வார்த்தைகள் காட்டி, கடைசியாக "உனக்குக் கிடையாது" என்று சொன்னால், அப்போது அவன் கோபங்கொள்கிறான், தன்னை இதுகாறும் மற்றவன் ஏமாற்றினான் என்று ஆத்திரமடைகிறான்.

நலிந்த நிலைமையில் வருத்தம் தோன்றுகிறது, ஏமாற்றப்பட்ட நிலைமையில் கோபம் கொந்தளிக்கிறது.

மக்களுக்கு ஆசைக்கனவுகளைத் தந்து பின்பு அவற்றை நிறைவேற்றாவிட்டால், மக்களுக்கு ஏற்படுகிற ஏமாற்றம் கோபக்கனலை வீசுகிறது, அதிகாரத்தை எதிர்த்துப்போராடும் பயங்கர நிலைமையை உண்டாக்குகிறது.

பிரெஞ்சுநாட்டில் அத்தகைய நிலைமை உண்டானது, புரட்சியாக வளர்ந்தது.

இந்தியப் பேரரசிலும் அத்தகைய நிலைமை உருவாகி வருகிறது. தெற்கில் திருவாங்கூர் கொச்சியிலிருந்து வடக்கே பஞ்சாப் மாநிலம்

வரை, மேற்கில் பம்பாயிலிருந்து கிழக்கில் அஸ்ஸாம்வரை எங்குபார்த்தாலும் அமளி, சச்சரவு, அடிதடிகள்,—இந்த உபகண்டத்தில் அமைதியானபகுதி எதுவுமே கிடையாது. ஓராண்டுக்காலமாக வந்த தலைப்புச்செய்தி களெல்லாம் மாநிலங்கள்தோறும் ஏற்பட்ட கொந்தளிப்புகளை விவரிப்பதாகவே உள்ளன. கல்கத்தாவில் கலவரம், பீகாரில் சலசலப்பு, திரு—கொச்சியில் துப்பாக்கிப் பிரயோகம், சென்னையில் கடையடைப்பு, பெல்லாரியில் ரயில் நிறுத்தம், ஒரிசாவில் வேலை நிறுத்தம், கர்நாடகத்தில் கண்டனம், பம்பாயில் பயங்கரக்கலகம், பஞ்சாபில் இரத்தக்களரி, ஆமதாபாத்தில் அடங்காத அமளி இப்படி கலவரச்செய்திகள் வந்தபடி இருக்கின்றன.

காரணம் என்ன ?

மக்களுக்குச்சில நம்பிக்கைகள் ஆங்காங்கு தரப்பட்டன. அவை இன்று நிறைவேற்றப் படவில்லை. நிறைவேற்றப் படாததுமட்டு மல்ல, மறக்கப்படுகின்றன. ஆசைக் கனவு களைத்தந்து, பின்பு அவற்றை அழிப்பதால் உண்டாகும் ஆபத்தானநிலை இங்கு உண்டாகி யிருக்கிறது.

“மக்களுக்கு நம்பிக்கைகளைத் தந்து' அவற்றை நிறைவேற்றுமல் விடுவதால் உண் டாக்குகிற ஆபத்து, “மிகப்பயங்கரமான ஆபத்து என்று பிரெஞ்சுப் புரட்சிபற்றிய வரலாற்றுசிரியர் சொன்னுரல்லவா? அத் தகைய பயமூட்டும் நிலைமை இங்கு தோன்றி வருகிறது.

முக்கியமாக இன்றைக்கு இந்தியப் பேரரசு முழுவதிலும் உண்டாகியிருக்கிற கலகங்கள் மொழிவழி மாநில அமைப்புகளின் காரணமாக எழுந்தவைகளாகும்.

“மொழிவழி மாநிலங்கள் வேண்டும்! சுதந்தர இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப் படும்!” என்ற ஆசை நினைவுகளை—நம்பிக்கை களை காங்கிரசுதான் முதலில் மக்களிடை பரப்பியது. இந்தியா விடுதலை பெற்றதும், மொழிவழி மாநிலங்கள் அமையும் என்ற நம் பிக்கை மக்களிடை நிலவியது ஆங்கில ஏகாதி பத்தியத்தின் கீழ் தனித்தனி மொழிகளுக்கும் மொழி மக்களுக்கும் இழைக்கப்பட்ட சீர்கேடு கள் சுதந்திர இந்தியாவில் தீர்க்கப்படும் என்று மக்கள் நம்பினுர்கள், மனப்பூர்வமாக எதிர்பார்த்தார்கள்.

அத்தகைய நம்பிக்கையைத்தான் காங்கிர சும் தந்தது.

ஆனுல் சுதந்தர இந்தியா மலர்ந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின், மாநிலங்கள் திருத்தி யமைக்கப்படும்பொழுது மொழிவழி அடிப் படை கைவிடப்பட்டுவிட்டது. மக்களுக்குத் தரப்பட்ட நம்பிக்கை நிறைவேற்றப்படவில்லை.

தரப்பட்ட நம்பிக்கைகள் நிறைவேற்றப் படாததால், மக்களுக்கு ஆத்திரம் மூண்டது; கலகங்கள் சூழ்ந்தன. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் உண்டான சூழ்நிலை இங்கு உண்டாகி யிருக்கிறது.

உறங்கிக் கிடப்பவனைத் தட்டி எழுப்பி “உனக்குப் பசியா?” என்று கேட்க, 'ஆம்!' என்று அவன் சொல்ல, “வா, என்னுடன் சற்று தூரம்! என்னுடைய மாளிகையில் உனக்குப் பசி தீரும்.” என்று நம்பிக்கை தந்து அழைத்துச் சென்று, மாளிகை அடைந் ததும் “ஒன்றும் கிடையாது போ!” என்று விரட்டி யடித்தால், கூட வந்தவன் சும்மாவா இருப்பான்? மாளிகையில் பெரிய சண்டை யல்லவா நடைபெறும்.

நாட்டு மக்களுக்குப் பலப்பல நம்பிக்கை களைத் தந்து, சுதந்தர மாளிகையை நோக்கித் “காங்கிரசு” அழைத்துச் சென்றது. மாளி கையை அடைந்ததும், தந்த நம்பிக்கைச் செய்திகளை மறுத்துவிட்டது.

மொழிவழி மாநில அமைப்பை காங்கிரசு முன்னுள் ஆதரித்தது, மாநாடுகளில் நீண்ட தீர்மானங்கள் நிறைவேற்றியது. தனது கமிட்டிகளைக் கூட மொழிவழி அமைப்பில் அமைத்துக்கொண்டது. சுதந்தர இந்தியா மலர்ந்ததும், மொழிவழி மாநிலங்கள் அமை யும் என்ற நம்பிக்கை மிகப் பலமாக வேரூன்றி விட்டது. இன்று நம்பிக்கை முறிக்கப்படும் பொழுது, ஆத்திரம் மூளுகிறது.

“நானே தான் அரசாங்கம்!” லூயி மன்னன் இறுமாப்புடன் சொன்னுன்.

அதே இறுமாப்புடன்தான் காங்கிரசு இருக் கிறது “நாங்கள்தாம் அரசாங்கம், அரசாங் கம்தான் நாங்கள்?”

டில்லி ஆதிபத்தியம் அதேவிதத்தில்தான் கட்டளையிடுகிறது.

பிரதமர் நேரு பண்டிதரும் அதே குரலில் தான் உத்தரவுகளைப் பிறப்பிக்கிருர்.

“ஆந்திரர்களுக்குத் தனி மாநிலமா? கூடவே கூடாது. நான் அனுமதிக்க மாட்டேன்”

கலகம், குழப்பம், எதிர்ப்பு, உண்ணுவிரதத் தில் ஒருவர் மரணம்! என்ற செய்திகள் வந்த தும், “ஆந்திரர்களுக்கு தனிமாநிலம்” என்று நேரு பண்டிதர் அறிவித்தார்.

இரண்டு அறிவிப்புகளும் அரசாங்கத்தின் முக்கியமான முடிவுகள், ஆனுல் பண்டிதநேரு

த்னிப்பட்ட முறையில் அந்த முடிவுகளை எடுத்திருக்கிறார். இந்தத் "தனிப்பட்ட முறையில் அரசாங்க முடிவுகளை" பண்டிதநேரு செய்வது பற்றி முன்னாளைய நிதிமந்திரி தேஷ்முக் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

"பம்பாய் மாநிலம் மத்திய அரசாங்கத்தின் கீழ்வரும்" முதலில் வந்த அறிவிப்பு.

"பம்பாய் மாநிலத்தின் நிலை ஐந்தாண்டுகளுக்குப் பின் நிர்ணயிக்கப்படும்" இரண்டாவது வந்த அறிவிப்பு.

பண்டித நேரு இந்த அறிவிப்புகளைத் தரும் பொழுது, மக்களைக் கலந்துகொண்டோ, மக்கள் சபையைக் கலந்துகொண்டோ, அரசாங்கத்தின் உயர்ந்த அமைப்பில் இருக்கும் மந்திரி சபையைக் கலந்துகொண்டோ செய்ததாகத் தெரியவில்லை.

நேரு தருகிற முடிவுகள் அரசாங்கத்தின் முடிவுகளாகின்றன. அரசாங்கத்தின் முடிவுகளை பண்டிதநேரு முன்கூட்டித் தந்து விடுகிறார்.

"நானே தான் அரசாங்கம்!" பதினான்காம் லூயி மன்னன் சொன்னான்.

"நானே தான் அரசாங்கம்!" பண்டிதநேரு செய்துகாட்டுகிறார்.

அரசாங்கத்தைத் தங்களுடைய தாகக் கொண்டு லூயிமன்னர்கள் ஆரம்பரித்தார்கள், மக்கள் அதைக்கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எதுவும் எதிர்பார்க்கவில்லை, அதனால் ஏமாற்றமும் அடையவில்லை. மன்னனென்றால் வாழ்த்தி வழிபட்டார்கள். ஆணவப்பேச்சு அரசர் குடிப்பண்பு என்று மக்கள் நம்பி ஏமாந்தநிலையில் கோபம் பிறந்தது. எந்த பாரிஸ்நகர மக்கள் லூயி மன்னர்களுக்குப் பராக்குக்கூறி மகிழ்ந்தார்களோ, அவர்களே கோபாவேசத்துடன் லூயி மன்னர்களை எதிர்த்துக் கிளம்பினார்கள். மன்னன் வருகிறானென்றால் பாரிஸ்நகர வீதிகளில் வாழ்த்தொலியும் வரவேற்புகளும் கோலாகலமும் கொண்டாட்டமும் இருந்தவை போய், லூயி மன்னன் வருகிறானென்றதும், தலையில் இருந்த தொப்பியைக்கூட எடுக்காமல் கோபப்பார்வையுடன் பிரெஞ்சு மக்கள் பாரிஸ்நகர வீதிகளில் நின்றார்களாம்.

நம்பிக்கைச்சிதறல்களின் விளைவு அது!

பண்டிதநேருவுக்கும் அத்தகைய நிலை பம்பாயில் உண்டானது. நேரு வருகிறாரென்றதும் வாழ்த்தொலியும் வரவேற்பும், தந்து கொண்டிருந்த பம்பாய் நகரம், "நம்பிக்கைச் சிதறலின்"பின், மாநில அமைப்பில் மராட்டியத்துக்குத் தரப்பட்ட நம்பிக்கை சிதறடிக்கப்பட்டபின், பண்டிதநேரு பம்பாய்க்கு வந்தபின் எத்தகைய வரவேற்பு கிடைத்தது? கண்ட இடங்களிலெல்லாம் கண்டன அறிவிப்புகளும், திரும்பிப்பார்த்த பொழுதெல்லாம் கருப்புக்கொடி ஆரவாரமும் அல்லவா அவருக்குக்கிடைத்தன. இராணுவப் போலீசும், துப்பாக்கிமுனைகளும் ஏவல்புரியும் நிலையல்லவா பிறந்தது.

பிரெஞ்சு நாட்டில் அதிகாரத்தை எதிர்த்து மக்கள் கிளம்பியதற்கு வரலாற்று ஆசிரியர் கூறிய முக்கிய காரணங்கள்.

நம்பிக்கைச்சிதைவு—எதிர்பார்த்து ஏமாற்றம்—

செயலற்ற பேச்சு,

பொறுப்பற்ற பதவி,

கட்டுப்பாடற்ற அதிகாரம்,

இந்தக் "கெடுவது காட்டுங்குறிகள்" ஒவ்வொன்றாக வளர்ந்து வருகின்றன இந்தியத் துணைக்கண்டத்தில்.

டில்லி அதிகாரத்திடம், காங்கிரசு ஆட்சியிடம், பண்டித நேருவிடம் மக்கள்—மாநிலங்கள் பலப்பல எதிர்பார்த்தன; எதிர்பார்ப்பதற்கான நம்பிக்கைச் செய்திகள் விடுதலை அடைவதற்கு முன்னும் விடுதலை அடைந்த பின்னும் மக்களுக்குத் தரப்பட்டன. அந்த நம்பிக்கைச் செய்திகளில் ஒன்றான் "மொழி வழி மாநிலம்" மக்களிடை பலமாகப் பரவியிருந்தது. மொழிவழி மாநிலங்கள் அமையவில்லை. மொழிவழி வாழ முடியும் என்று நினைத்து எதிர்பார்த்திருந்த மக்கள் ஏமாற்றமடைந்தனர். மக்களின் ஏமாற்றம் அதிகாரத்தை எதிர்த்து கோபமாகக் கொந்தளித்துள்ளது. ஆங்கில ஏகாதிபத்தியக் கொடுமையில் ஏற்பட்ட அமளிகளைவிட அதிகமான அடக்குமுறைகள் மாநிலங்களின் அன்றாடச் செய்திகளாகிவிட்டன.

மக்களுக்கு ஏற்படுகிற ஏமாற்றம் மகத்தான ஆபத்தைத் தருவது—மாபெரும் அரச பரம்பரைகள் அதன்முன் உருண்டோடியிருக்கின்றன, வரலாறு தரும் பாடம், டில்லி ஆதிபத்தியத்துக்குச் சூழவிருக்கும் ஆபத்தை அது காட்டுகிறது.

★

பாவலர் போற்றும் காவலர்

[இரா. நெடுஞ்செழியன்]

பண்டைத் தமிழகத்தில் குறுமன்னர்கள் பலர் சிறு சிறு பகுதிகளைத் தமதாக்கிக் கொண்டு தனித்தனியே ஆட்சிசெலுத்தி வந்தனர். அவர்கள் தம்முள் சிலபொழுது ஒருவரோடொருவர் பகைத்துக்கொண்டும், சிலபொழுது ஒருவரோடொருவர் நட்புறவு கொண்டாடிக்கொண்டும் வாழ்ந்துவந்தனர்.

அப்படிப்பட்ட குறுநில நாடுகளில் விச்சிநாடு என்பது ஒன்று. அது விச்சி என்னும் மலையைச்சூழ்ந்த பகுதியைக் கொண்டிருந்ததால், அதற்கு விச்சிநாடு என்று பெயர் வழங்கலாயிற்று. அந்த நாட்டை விச்சிக்கோ என்று அழைக்கப்பட்ட வேந்தனொருவன் ஆண்டுவந்தான். அவனுக்கு ஒரு தம்பி இருந்தான். அவன இளவிச்சிக்கோ என்று அழைக்கப்பட்டான்.

விச்சிநாட்டை அடுத்து கண்டீர நாடு என்று ஒரு குறுநிலப்பகுதியிருந்தது. அந்த இரண்டு நாடுகளும் மிக நட்புறவோடு வாழ்ந்துவந்தன. கண்டீரநாட்டிலும் ஒரு இளவரசன் வாழ்ந்தான். அவன் இளங்கண்டீரக்கோ என்று எல்லோரும் அழைத்து வந்தனர். விச்சிநாட்டு மன்னனும் கண்டீர நாட்டு மன்னனும் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்துவந்தனர். அவர்களைப்போலவே இளவரசர்களான இளவிச்சிக்கோவும், இளங்கண்டீரக்கோவும் நீங்காப்பற்றுடைய நண்பர்காளகத் திகழ்ந்து வந்தனர்.

ஒருமுறை இளங்கண்டீரக்கோவைக் காணும் பொருட்டு இளவிச்சிக்கோ கண்டீர நாட்டிற்கு வந்தான். இருவரும் மாளிகை யொன்றில் தங்கியிருந்து அன்புடன் அளவளாவிக்கொணடிருந்தனர். அப்பொழுது இளங்கண்டீரக்கோவைப் பார்க்க பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர்பெருமான் அங்கு வந்தார்.

பெருந்தலைச்சாத்தனார் என்னும் அப்புலவர் பெருந்தலை என்னும் ஊரைச்சார்ந்தவர். அவரது தந்தையார் ஆவூர் மூலங்கிழார் என்பவர். சாத்தனார் பிள்ளைப்பருவத்தில் ஆவூரிலேயே வாழ்ந்து, பிறகு தனிவாழ்க்கை நடத்தத் தொடங்கிய பருவத்தில் பெருந்தலையைத் தமக்கேற்ற ஊராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். எனவேதான் அவரைப் பிற்காலங்களில் பெருந்தலைச் சாத்தனார் என்று வழங்குவராயினர். அவர் புலமையினால் மிகச் சிறந்து மேம்பட்டு விளங்கினாரென்றாலும், வறுமை அவரை மிகவும் வாட்டிக்கொண்டே இருந்தது. அவரது குடும்பமோ பலபிள்ளைகள் நிறைந்த பெருங்குடும்பமாக விளங்கிற்று. போதுமான வருவாய்க்கு வழியில்லை. எனவெ அவர் தமிழார்வங்கொண்ட பூமான்களையும், செல்வவான்களையும் கண்டு, தமது புலமை மேம்பாட்டைப் புலப்படுத்தி, அவர்களது அன்பையும், ஆதரவையும் பெற்று, அவர்களால் அளிக்கப்பெறும் பரிசிற்பொருள்களை கொண்டுவந்து, அவற்றைக்கொண்டு குடும்பத்தை காப்பாற்றி தந்தார். அவர் ஏழையாக வாழ்ந்தாரேஒழிய, ஒருபொழுதும் கோழையாக வாழ்ந்ததில்லை. செல்வம் படைத்தோர் விரும்பிக் கொடுத்தால் பரிசில்களை ஏற்றுக் கொள்வாரேயல்லாமல், சற்று அருவருப்போடு எவ்வளவுபெரிய பரிசில்களைக் கொடுக்க எவ்வளவுபெரியவர்கள் முற்பட்டாலும், அவற்றை ஏற்றுக்கொள்ள அவர்மனம் ஒருபோதும் ஒருப்பட்டதில்லை. மானம் பெரிதென்று கருதியே வாழ்வு நடத்தி வந்தார். ஒரு பொழுது கோடை மலைத் தலைவனான கடிய நெடுவேட்டுவனிடம் பரிசில் பெறச் சென்றார். அவன் பரிசிலைக் காலந் தாழ்த்துக் கொடுக்க முற்பட்டான் என்பதற்காக, அவனிடம் பரிசில் பெறாமலேயே திரும்பி விட்டார். அதுபோலவே பிறிதொருபொழுது மூவன் என்பானிடமும் பரிசில் பெறாது திரும்பிவிட்டார். ஒருமுறை அவர் வறுமையால் வாடிக்கொண்டிருந்தபோது முதிரமலைக்குத் தலைவனான குமணனைக் காணச்சென்றார். அப்பொழுது குமணன் அவனது தம்பியால் விரட்டப்பட்டுக் காட்டில் வதிந்துவந்தான். குமணன் காட்டில் வதிகின்றான் என்பதைக் கேள்வியுற்ற புலவர், அவனைக் காட்டிடத்தே சென்றுகாண விரும்பி அவனிடம் சென்றார்.

தான்வசதியற்றிருக்கும் நிலையில் புலவர் தன்னிடம் வந்துள்ளாரே என்று பெரிதும் நினைந்து வருந்தித் துயருற்றான். அதுபோது, குமணனின் தலையை யார் கொண்டுவருகிறார்களோ அவர்களுக்குப் பெரும்பொருள் பரிசாக நல்கப்படும் என்று இளங்குமணின் நாட்டில்பறையறைவித்திருந்தான். அது குமணனின் நினைவிற்கு வந்தது. உடனே குமணன் முக மலர்ச்சியுற்று தன்கையிலிருந்த வாளைப் புலவர் கையில் கொடுத்துத், தன் தலையை வெட்டி எடுத்துக்கொண்டுபோய்த் தம்பியிடம் காட்டிப் பெரும் பொருளைப் பரிசாக வாங்கிக் கொண்டு செல்லும்படி கூறினான். புலவர் பெரிதும் மனமுருகி, அவனது ஈகைத்தன்மையை அறிந்துவியந்து, வாளொடு அவனது தம்பியிடம்சென்று, குமணனது அருமைபெருமைகளை எடுத்துரைத்து, அவனுக்கு அறிவுரை கொளுத்தினர். அவன மனம் மாறுபட்டுத் தமையனை அன்போடு ஏற்றுக் கொண்டதோடு, புலவரையும் போற்றினான். இவ்வாருகப் புலவர் பெருந்தலைச்சாத்தனார் அறநெறியில் நின்று பொருள்பெறும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.

கண்டீரக்கோவும், இளங்கண்டீரக்கோவும் பெருந்தலைச் சாத்தனாரை மிகவும் போற்றிப் பாராட்டிப் பாதுகாத்துவந்தனர். அத்தகைய தொடர்பின் காரணமாகத்தான் பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக் கோவைக்காண அங்குவந்தார். பெருந்தலைச் சாத்தனாரின் பெயரும், புகழும் எங்கும் பரவியிருந்ததால், அவரைப்பற்றி எல்லோரும் நன்கு அறிந்திருந்ததோடு, அவரிடம் நல்ல மதிப்பும் காட்டிவந்தனர். பெருந்தலைச் சாத்தனார் தன்னை நோக்கி வருவதைக்கண்டதும் இளங்கண்டீரக்கோ எழுந்து முன்னால் சென்று அவரைவணங்கி வரவேற்றான். இளங்கண்டீரக் கோவோடு, இளவிச்சிக்கோவும் எழுந்துசென்று புலவரை வணங்கி வரவேற்றுநின்றான். புலவர் இளங்கண்டீரக்கோவை ஆரத்தழுவி தம் அன்பின் பெருக்கைக் காட்டிக்கொண்டார். ஆனால் அவர் இளவிச்சிக்கோ அருகில் நிற்பதைப் பார்த்தும் பார்க்காததுபோல் இளங்கண்டீரக்கோவிடம் அளவளாவிக் கொண்டிருந்தார். புலவர் தன்னைப்பொருட்படுத்தாமல் இருந்தது, இளவிச்சிக்கோவுக்கு மிக்க மன வருத்தத்தைத் தந்தது. தான் மிகவும் அவமானப்படுத்தப்பட்டுவிட்டது போன்றதொரு உணர்ச்சி அவனது உள்ளத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது. சற்றுநேரம் வேதனையை அடக்கிவைத்துப்பார்த்தான். அவனால் முடியவில்லை. நெஞ்சு வெடித்துவிடும் போல் அவனுக்குப்பட்டது. தன்னைப் புலவர் மதிக்காததின் காரணத்தை அவரிடமே கேட்டுத்தெரிந்து கொள்வதன்மூலம் தன் மனதை ஆற்றிக்கொள்ள அவன் நினைத்தான்.

"புலவர் பெருமானே ஏன் என்னை ஆரத்தழுவ மறுத்துவிட்டீர்கள்? என்னை ஒரு பொருட்டாகத் தாங்கள் நினைக்காதன் காரணம் என்ன?" என்று இளவிச்சிக்கோ துடிதுடிப்புணர்ச்சியோடு கேட்டான்.

பெருந்தலைச் சாத்தனார் அவன்பக்கம் திரும்பி "அதற்குக் காரணம் உண்டு!" என்று அமைதியாகக் கூறினார்.

"அந்தக் காரணத்தை நான் அறியலாகாதா?" என்று அவன் வினவினான்.

"நீ அறிந்து ஆகபபோவது ஒன்றுமில்லை! எதற்காக உன்னிடம் அதனைச் சொல்ல வேண்டும்?" என்று புலவர் கூறினார்.

"என்மீது ஏதாவது தவறு உண்டா?" என்று அவன் கேட்டான்.

"உன்மீது ஒன்றுமில்லை!" என்று புலவர் விடையிறுத்தார்.

"பின் ஏன் என்னை வெறுத்தொதுக்குகிறீர்கள்?"

"அதற்குத்தான் காரணம் உண்டு என்று முன்பே கூறினேனே!"

"அந்தக் காரணத்தை நான் அறியக் கூடாதா?"

"அறியக் கூடாது என்பதல்ல; அறிய வேண்டிய இன்றியமையாமை இல்லை"

காரணத்தை அறிந்துகொண்டால் நான் என்னைத் திருத்திக்கொள்ளவும், மனஆறுதல் அடையவும் வழி ஏற்படும். எனவேதான விளக்கம் தரும்படி இறைஞ்சிக்கேட்டுக் கொள்கிறேன்!"

"வேந்தே! இந்தக் கண்டீரக்கோ வள்ளல் தன்மையால் மிகுபுகழ் எய்தியவன். இவன் நாடும் அப்படிப்பட்டதுதான். இவன் நாட்டில் கணவன்மார் வீட்டைவிட்டு மிகத்தொலைவு சென்றிருந்தாலும், வீட்டிலிருக்கும் மனைவிமார் தம் தகுதிக்கேற்ப இரவலர்க்குக் கொடுத்துப் புகழை வளர்ப்பார்கள். அதனால்தான் இக் கண்டீரக்கோவை ஆரத்தழுவினேன். உன் முன்னோருள் ஒருவனை நன்னன் என் பான், அநீதியான முறையில் பெண்கொலை

புரிந்தவனுவான். உன்னுடையநாடோ பாடிக் கொண்டுவரும் இரவலர்க்குக் கதவடைத்து, ஏதும் கொடுக்க மறுக்கும் தன்மையையுடையது. அதனுல் எம்மைப்போன்ற புலவர்கள் விச்சிமலையையும், விச்சிநாட்டையும் புகழ்ந்து பாராட்டுவதை நிறுத்திக் கொண்டார்கள். அதனுல் அந்த மலைக்கு உரிமையுடைய உன்னை நான் ஆரத்தழுவாமல் விட்டேன்'' என்று புலவர் விளக்கந்தந்தார்.

இளவிச்சிக்கோ புலவரின் சொற்கேட்டு வெட்கப்பட்டுத் தன் நிலையை நினைந்து வருந்திஞன். பாவலர் போற்றும் நாவலராக இருக்கும் தன்மை இளங்கண்டீரக்கோவிடம் இருந்த காரணத்தால்தான், பெருந்தலைச்சாத்தனுர் அவனைப் போற்றிப் பாராட்டினுர்.

இந்த நிகழ்ச்சியைப் பெருந்தலைச் சாத்தனுரே இளவிச்சிக்கோவிடம் உரைப்பதைப் புறநானூறு 151 ஆம் செய்யுள் இனிது தெளிவு படுத்துகிறது

பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்தோய் சிமைய விறல்வரைக் கவாஅற்
கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலின் அன்றும்
முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
நன்னன் மருகன். அன்றியும் நீயும்
முயங்கற்கு ஒத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க்(கு) அடைத்த கதவின் ஆடுமழை
அணங்குசால் அடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனம் எமரே !

[புறநானூறு—151.]

[பொழிப்புரை : முன்பேயும் முன்பேயும் பாடுவார் விரும்பவானைப் பொருந்திய உச்சியையுடைய சிறந்த மலைப்பக்கத்து, நெடுந்தொலைவின்கண்ணே தம் கணவன் செல்லினும், அணிகலனை அணிந்து புல்லிய தலையையுடைய மெல்லிய பெண்யானையைப் பரிசிலாகக் கொண்டு அவர் பெண்டிரும் தம் தரத்திலே பரிசில் கொடுப்பார்கள் ; வள்ளிய புகழையுடைய கண்டீரக்கோ வாதலாலே பெரிதும் நான் தழுவிக்கொண்டேன் ; பொன்னுற்செய்யப்பட்ட தேரினையுடைய (பெண்கொலை செய்த) நன்னன் மரபினை நீ சேர்ந்தவனுவாய் என்பது மட்டுமல்லாமல், நீயும் தழுவுவதற்குப் பொருத்தமுடையவன்தான் என்ருலும், விளங்கும் மொழியையுடைய பாடுபவர்களுக்கு அடைத்த கதவு காரணமாக இயங்கு முகிலணங்கு அமைந்த அரைமலைக்கண்ணே பொழியும் நுமது மணநாறும் உயர்ந்த மலையை எம்போன்ற புலவர்கள் பாடுதலை நீக்கினுர்கள் ; ஆதலால் நான் நின்னைத் தழுவவில்லை.

விறல் - மலை ; கவான் - மலைப்பக்கம், பொலம் - பொன்]

இச்செய்யுளில் அமைந்துள்ள சொற்றிறமும், பொருளாழமும் படித்துப்படித்து இன்புறுதற்குரியன வாகும். பண்டைக்காலத் தமிழகத்தில் வள்ளண்மை எவ்வாறுபோற்றி மதிக்கப்பெற்று வந்திருக்கிறது என்பதற்கு, புலவர்கள் எப்படிப்பட்ட அறநெறியைக் கடைப்பிடித்து வந்துள்ளார்கள் என்பதற்கும் இச் செய்யுள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மருத்துவ மயக்க மருந்து

(4)

நைட்ரஸ் ஆக்சைட் வாயுவைப் பயன்படுத்தி ரணமருத்துவ வேதனையை நீக்கலாம் என்ற தமது எண்ணத்தைச் செயல்முறையில் சரிபார்க்க ஹொரேஸ் வெல்ஸ் எண்ணங் கொண்டார். கோல்டன் நடத்திய விழா முடிவுற்றதும், வெல்ஸ் கோல்டனையணுகி மறுநாள் தனது மனைக்கு அந்த வாயுவில் கொஞ்சம் அனுப்பப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வீட்டிற்குச் சென்றார்.

ஜான் ரிக்ஸ் என்ற தனது முன்னாள் மாணவரை அழைத்து வெல்ஸ் சிரிக்கும் வாயுவை பயன்படுத்துவதால் ஏற்படும் பலாபலன்களை பற்றி அவருடன் விவாதித்தார். இருவரும் அன்றிரவு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

"நோயாளி ஏதேனும் திடீர்த் தூண்டுதலுக்காளாகி முரட்டுச்செயல்களில் ஈடுபடாதவாறு தடுக்க முடியுமா?

முற்றிலும் உணர்வற்ற நிலைக்கு மாற்ற வல்ல மயக்கநிலையை உண்டாக்கப் போதுமான அளவு வாயுவை நோயாளிக்குக் கொடுப்பது நல்லதுதானா?"

உணர்வற்ற நிலைக்கு மாற்றி ஒரு பல்லைப் பிடுங்கியபின் நோயாளி உரிய காலத்தில் மீண்டும் உணர்வைப்பெறுவானா?

மிகவும் ஆபத்தான முயற்சி!

இந்த ஆராய்ச்சிக்கு நோயாளியை எங்கே தேடுவது?

முறையின் உறுதியின்மை, ஆபத்து இவைகளை யறிந்தும் ஒருவன் தன்னை உயிர்ப் பரிட்சைக்கு உட்படுத்திக்கொள்ளத் துணிவானா?

அல்லது எந்தநோயாளியையாவது அதற்கு அழைப்பது தகுமா?"

இவ்விதச் சிக்கல்களைத் தீர்க்க வெல்ஸ் தன்னையே ஆராய்ச்சிக்குட்படுத்திக் கொள்ள முடிவுசெய்தார்.

1844 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் *11*-ம் நாள். கோல்டன் விழாவை யடுத்த நாள். காலை *10* மணிக்கு வெல்ஸ் மருத்துவமனையில் ஒரு சிறு குழுவினர் சேர்ந்தனர். வெல்ஸ் வாயுவை உட்கொண்டு ஒரு பல்லைப் பிடுங்கிக்கொள்ள இருந்தார். ரிக்ஸ் பல்லைப் பிடுங்க வேண்டியவர். கோல்டன் நைட்ரஸ் ஆக்சைட் வாயுவைக் கொண்டுவந்திருந்தார். வெல்சின் 'வேடிக்கை'யைக் காண, முதல்நாள் விழாவில் காயம்பட்டுக்கொண்ட கூலி, இன்னும் கோல்டனின் உறவினர் ஒருவர், ஆகியோர் வந்திருந்தனர்.

வாயு ஒரு ரப்பர் பையில் அடைக்கப்பட்டு ஒரு ரப்பர் குழாயும் பொருத்தப்பட்டிருந்தது. ரிக்ஸ், கதவுகள் ஜன்னல்கள் எல்லாவற்றையும் திறந்துவைக்குமாறு கூறி எல்லோரையும் எந்தச் சமயத்திலும் வெளியே ஓடுவதற்குத் தயாராகஇருக்கும் படியும் கூறினர். வாயுவை நன்றாக உட்கொண்டு வெல்ஸ் ஏதேனும் முரட்டுச்செயல்களில் இறங்கக்கூடும் என்று எண்ணினர்.

வெல்ஸ் அந்த ரப்பர்பையுடன் பல்பிடுங்குவதற்குரிய நாற்காலியில் அமர்ந்தார். ரப்பர் பையிலிருக்கும் அடைப்பானை திருப்பி திறந்த முனையைத்தனது வாயினுள் வைத்துக் கொண்டு; ஆழ்ந்த மூச்சையிழுத்தார். வாயு உட்சென்றது. வெல்சின் முகம்மாறி வெளுத்து நீல நிறத்திற்கு மாறியது. வேலையை ஆரம்பிக்குமாறு ரிக்சிற்கு உணர்த்துவதற்குக் கை காட்டமுயற்சித்தார். ஆனால் கை துவண்டு மார்பிலேயே விழுந்தது. தலைகவிழ்ந்து. கண்கள் சுழன்றன. இமைகள் மூடின. பேராசிரியர் கோல்டன் வாயு நிறைந்தபையை வெல்சிடமிருந்து எடுத்தார். ரிகஸ் நேரத்தை வீணாக்காமல் தனது வேலையில் இறங்கினர். வெல்ஸ் அப்படியே உட்கார்ந்திருந்தார். வேதனையின் அறிகுறி இல்லை; கூச்சல் இல்லை; எவ்வித மாற்றமும் இல்லை. பல்லைப் பிடுங்கிக்கொள்ளும்போது நோயாளிகள்போடும் கூச்சல்களை ரிக்ஸ் கவனித்திருக்கிறர். வெல்ஸ் சிலைபோல இருப்பதைக்கண்டு பெரிதும் வியந்தார். குறடு ஒன றினல் வெல்சின் ஒருபல்லைப் பிடுங்கினர். அதை அப்படியே மற்றவர்களுக்குக் காட்டிக் கூறினர்.

"பல் வெளியே வந்துவிட்டது!"

எல்லோரும் வெல்சைக் கவனித்தனர். உணர்வற்ற நிலையிலேயே சாய்ந்து கிடந்தார் வெல்ஸ். கொஞ்சநேரங்கழித்து வெல்ஸ் சற்றே

கண்விழித்தார். உணர்வைப்பெற்றார். வாயில் ரத்தம் பெருகியிருந்தது. துப்பிவிட்டு "பல் மருத்துவத்தில் புதிய சகாப்தம் ஆரம்பம்! எனக்கு வேதனையே இல்லை" என்றுகூறினார்.

அங்கிருந்த எல்லோருக்கும் வியப்பாகவே இருந்தது.

"ஒரு ஊசியை விரலில் குத்தும்போது ஏற்படும் வலியைப்போல கொஞ்சம் உணர்ந்தேன். இக்கண்டுபிடிப்பு மிகவும் அதிசியக்கத்தக்க தொன்றாகும்." என்று வெல்ஸ் கூறினார்.

வெல்சின் ஆராய்ச்சி வெற்றியைக் கொடுத்தது. புதிய உற்சாகத்துடன் மேற்கொண்டு ஆராயமுனைந்தார்.

அது டிசம்பர் மாதம். கிருஸ்துமஸ் விழா நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்கான பொருள்களை சேகரிப்பதிலும் வாங்குவதிலும் மக்கள் ஈடுபட்டிருந்தனர். வெல்சும் கடைக்குச் சென்று சில பொருள்களை வாங்கினார். ஆனால் விழாப் பொருள்களல்ல, நைட்ரஸ் ஆக்சைட் வாயுவைத் தயாரிப்பதற்கான சில கருவிகளை வாங்கினார்.

கண்ணாடிக் குழாய்கள், ரப்பர் குழாய்கள், கண்ணாடி ஜாடிகள், கோப்பைகள், விளக்குகள்—வெல்சின் அறை ஒரு ஆய்வுச் சாலையாக மாறியது. கண்ணாடி ஜாடிக்குள் குமிழிகள் வெளியிடும் வாயுவைக் கவனித்துக்கொண்டே பலவிதக் கேள்விகளை தன்னகத்தே கேட்டுக்கொண்டார். வெவ்வேறு முறைகளில் வாயுவைத் தயாரித்து தானே அதை உட்கொண்டு ஒவ்வொரு முறையும் அதன் பொதுத் தன்மையை ஆராய்ந்து குறித்துக்கொண்டு வந்தார்.

கிருஸ்துமஸ் விழா வந்தது: சென்றது. ஆனால் வெல்சிற்கு எதுவுமே தெரியாது. ரணமருத்துவ வேதனையிலிருந்து மக்கள் விடுதலையடைய அவர் ஆராய்ச்சியுலகில் அலைந்து கொண்டிருந்தார். கடைசியாக வாயுவைப் பயன்படுத்துவதில் ஒரு அளவை வரையறுத்துக்கொண்டு அதை நோயாளிகளிடத்தே கொடுத்து ஆராயத் தயாரானார்.

ஜனவரி மாதம் மத்திக்குள்ளாக வெல்ஸ் வாயுவை பன்னிரண்டு நோயாளிகளுக்குக் கொடுத்து பல் எடுப்பதில் முயற்சித்தார். அதில் ஒரு முறை தவிர மற்றவைகளில் வெல்ஸ் வெற்றி பெற்றார். ஹார்ட்போர்ட் நகர் முழுவதும் வெல்சின் கண்டுபிடிப்பு பரவிற்று. இப்புதிய முறை மற்ற இடங்களுக்கும் உலக முழுவதும் பரவ வேண்டும் என்று வெல்ஸ் எண்ணி, நியூயார்க், போஸ்டன் போன்ற நகரங்களிலுள்ள சிறப்படைந்த மருத்துவ விடுதிகளில் புதிய முறையின் முக்கியத்தை செயல் முறையில் எடுத்துக்காட்ட வேண்டும் என்று முடிவுசெய்து கொண்டார்.

தன்னிடம் முன்புதொழில் கற்றுக்கொண்ட வில்லியம் தாமஸ் கிரீன் மார்டன் (William Thomas Green Morton) என்பவர் போஸ்டன் நகரில் பல் மருத்துவராக தொழில் புரிந்து வந்தார். மேலும் சார்லஸ் ஜாக்சன் (Charles T. Jackson) என்ற மற்றொரு மருத்துவ நண்பரும் இருந்தார். அங்கு சென்றால் அவர்களின் உதவியால் போஸ்டன் நகர் மருத்துவ விடுதியில் தம்முறையைச் செயல்புரிந்து காட்ட வழி கிடைக்கும் என வெல்ஸ் எண்ணி போஸ்டன் நகர் சென்றார்.

போஸ்டன் நகருக்கு வந்து சேர்ந்ததும் ஜாக்சன், மார்டன் இருவரையும் கண்டு தனது புதிய கண்டுபிடிப்பையும் தனது எண்ணத்தையும் வெளியிட்டார். ஜாக்சன் வெல்சின் கண்டுபிடிப்பையும், அவரது திறமையையும் மதிக்கவில்லை. மாறாக கேலியாகப் பேசினார். ஜாக்சனுடைய எண்ணம், அதுவரை பலநூற்றாண்டுகளாக பலசிறப்படைந்த அறிஞர்களால் கண்டுபிடிக்கப்படாத கண்டுபிடிக்க முடியாத ஒன்றை, ஹார்ட்போர்ட் நகரின் எங்கோ ஒரு மூலையில் பல் மருத்துவத் தொழில்புரியும் வெல்சினால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும் என்பதே!

ஆனால் மார்டன் வெல்சின் எண்ணத்தை அறிந்தபோது பொதுவாக உயர்த்திப் பேசாவிட்டாலும் இகழ்வாகப் பேசவில்லை. மாசாச்சுசெட்ஸ் பொது மருத்துவ விடுதியில் வெல்சின் புதிய முறையை செயல்புரிந்து காட்டுவதற்கான ஏற்பாடுகளை மார்டன் செய்தார். மருத்துவ விடுதியில் இருந்த மருத்துவர்களுக்கு வெல்சின் முறையில் நம்பிக்கையும் இல்லை அதிக விருப்பமும் காட்டவில்லை. ஆனால் அவரது முறையை செய்து காட்டுவதை மறுக்கவில்லை. வெல்ஸ் நோயாளிக்காக காத்திருந்தார். காலை அறுத்துவிட வேண்டிய ஒரு நோயாளி வந்தான். அவனுக்கு வெல்சின புதிய மயக்க மருந்தைக் கொடுத்து ரணமருத்துவம் செய்வதற்கு ஒத்துக்கொண்டனர். ஆனால் திடீரென அந்த நோயாளி தனது காலை அறுத்துக்கொள்வதை கால வரையரையின்றி தள்ளி வைத்தான்.

அக்காலத்தில் ரண மருத்துவத்திற்குட்படுவதை நோயாளிகள் பெரும்பாலும் தவிர்த்து வந்தனர். தாங்கிக் கொள்ளும் நிலையில்

நோயின் தன்மையிருந்தால் ரணமருத்துவத்தைத் தள்ளி வைபபதில் தயங்கமாட்டார்கள். பொதுவாக மிகவும் முற்றின நிலையிலேயே ரண மருத்துவத்திற்குட்பட்டதாலும் உள்ள உறுதி கொள்ளாததாலும் அனேகமாக ரண மருத்துவத்தில் பலர் இறக்க நேரிட்டது. இதன் காரணமாகவே ரண மருத்துவம் மக்களிடையே மிகவும் பயத்தை யளித்து வந்தது,

இவ்விதச் சூழ்நிலையில்தான் வெல்ஸ் தனது புதிய முறையை ரணமருத்துவத்தில் புகுத்தி வெற்றிகாண ஒரு நோயாளிக்காகக் காத்துக் கொண்டிருந்தார். கடைசியாக அதற்கு வாய்ப்பு கிடைத்தது. 1845-ம் ஆண்டு ஜனவரி மாதம். வெல்ஸ் மருத்துவர்களுக்கும் மருத்துவம் பயின்றுகொண்டிருந்த மாணவர்களுக்கும் தனது புதிய கண்டுபிடிப்பையும் அதன் முறையையும் விளக்கி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

ஒருவன உல்லாச நோக்கோடு வாயுவை உட்கொண்டால் அவன் விநோத நடவடிக்கைகளில் ஈடுபடுவான். ஒருவன் ஓய்வு பெறும் நோக்கோடு வாயுவை உட்கொண்டால், அவன் ரணமருத்துவத்திற்கான உணர்வற்ற மயக்க நிலையை எளிதில் அடைவான்.

வெல்ஸ் கூறிய இக்கொள்கையில் ஒரு அடிப்படை உண்மை பொதிந்து கிடந்தது. ஒருவன் உள்ள உறுதியுடன் ரணமருத்துவத்திற்குட்பட்டால்தான் ரணமருத்துவம் வெற்றிபெறும். உள்ள உறுதி இல்லையானல் ரண மருத்துவம என்ற பயமே நோயாளியைச் சாகடித்துவிடும்; "ரண மருத்துவம் வெற்றியுடன் முடிந்தது, ஆனல் நோயாளி மட்டு இறந்துவிட்டான்" என்ற முடிவே ஏற்படும். நோயாளிகள் உள்ள உறுதியுடன் இருத்தல் இன்றியமையாததாகும். இதன் காரணமாகவே மருத்துவர்கள் மருந்தைவிட நோயாளிகளின் உள்ள உறுதியை முக்கியமானதாகக் கருதுகிருர்கள். தற்பொழுது ரணமருத்துவத்திற்குமுன் நோயாளிகள்உள்ள உறுதியை பெறச் செய்வதில் மருத்துவர்கள் தவறுவதில்லை.

சொற்பொழிவிற்குப் பின்னர் வெல்ஸ் வாயுவின் தன்மையை செயல்முறையில் உணர்த்தத் தயாரானர். அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒரு இளைஞர் எழுந்து முன் வந்து தான் எடுத்துக்கொள்ள விரும்பிய ஒரு பல்லை, வாயுவை உபயோகித்து பிடுங்குமாறு கேட்டுக்கொண்டார். வெல்ஸ் எதை நினைத்தும் தயங்கவில்லை. தனது முறையை தெளிவாக்கப் புறப்பட்டார்.

இளைஞன் வாயுவை நன்ருக உட்கொண்டான்; ரணமருத்துவதிற்கான நிலையை அடைந்தாற்போல் காணப்பட்டான். வெல்ஸ் வாயுப்பையை எடுத்துவிட்டு ரணமருத்துவராக மாறினர். உணர்விற்கூட்பட்ட பல்லீரலின் இடையில் குறட்டைவைத்து அழுத்தினர். இளைஞன் அசைவற்றே இருந்தான். வெல்ஸ் பல்லை எடுப்பதில் ஈடுபட்டார். பரபரபபான சில விநாடிகள் கடந்தன. பல் வெளியே எடுக்கப்பட்டது! ஆனல் வெல்ஸ் எதிர்பார்க்காத நிகழ்ச்சியொன்று நடந்தது. **நோயாளி புலம்பினன்!** உடனே கூட்டத்திடையே ஒருவரின் கேலிச் சிரிப்பும் அதைத் தொடர்ந்து கேலிப் பேச்சுக்களும் அந்த மண்டபத்தில் எதிரொலித்தது. யாரோ ஒரு பயித்தியக்காரன் என்று யாவரும் எண்ணிக் கொண்டு கலைந்தனர். கூட்டம் வெல்சின் தோல்வியோடு முடிந்தது.

அந்த இளைஞன் புலம்பியதால் வெல்ஸ் விளக்கிய ரணமருத்துவமுறை வேதனையை நீக்காது. அம்முறை ஏற்றதல்ல என்று மசாச்சுசெட்ஸ் மருத்துவர்கள் துணிந்து கூறிவிட்டனர். தோல்வியை ஏற்றுக் கொள்ளவேண்டியவராகிவிட்டார் வெல்ஸ். இளைஞனின் புலம்பியதன் காரணத்தை வெல்ஸ் ஆங்கு குழுமியிருந்த மருத்துவர்களுக்குத் தெரிவித்து மற்றுமோர் தடவை அந்த முறையை செயல்முறையில்காண இசை பெற்றிருக்கலாம். ஆனல் வெல்ஸ் அப்படிச்செய்யவில்லை. அவரைவிட நன்கு படித்துப் பட்டம்பெற்ற மருத்துவர்கள அங்கு இருந்ததால் அவர்களின பேச்சுக்கு எதிராக வெல்சினல் எதுவும் பேச முடியவில்லை. உடைந்த உள்ளத்தோடு ஹார்ட்போர்டுக்குத் திரும்பினர்.

ஊர் திரும்பியதும் நண்பர் பலர் அவரது வெளியூர்ப் பயணத்தை விசாரித்தனர். அவர்களிடம், "என் கொள்கைகளை அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். ஆனல் இன்னும் ஐந்து ஆண்டுக்காலத்திற்குள்ளாகப்பெரும் ரணமருத்துவங்களில் இது பயன்படுத்தப்படும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்" என்று கூறினர்.

அவ்வாறே, வாயுக்களைக்கொண்டு மயக்க நிலையை ஏற்படுத்தி அதன் மூலம் ரண மருத்துவத்தை வேதனைக்கிடமில்லாமல் செய்யலாம் என்பதை போஸ்டன் நகர். மசாச்சுசெஸ்ட் மருத்துவ விடுதியினர் தெரிந்து கொள்ள வெகு காலம் செல்லவில்லை. வெல்ஸ் விட்ட வேலையை அவரிடம் பயின்ற மார்டன் தொடர்ந்தார். எந்த இடத்தில் வெல்சினல்

வெற்றியைப் பெற முடியவில்லையோ அதே இடத்தில் மார்டன் தனது புதியமுறை பயன் படுத்தி ரணமருத்துவத்தில் பெரியதொரு வெற்றியைப் பெற்றார்.

வெல்சின் போஸ்டன் நிகழ்ச்சிக்குப்பின் ஆறு மாதங்கள் கழித்து மார்டன் ஹார்ட் போர்ட் நகருக்கு வந்திருந்தார். வெல்ஸ் போஸ்டர் நகர் மருத்துவ விடுதியில் செய்த ரணமருத்துவ முறையைப் பார்வையிட்டவர் களில் மார்டனும் ஒருவராவர். அவர் வெல்சைக் கண்டு பேசிக்கொண்டிருக்கையில் நைட்ரஸ் ஆக்சைட் வாயுவைப்பற்றியும் அவரது முறையைப்பற்றியும் விரிவாகக் கேட்டு அந்த வாயுவைத் தயாரிக்கும் விதத்தையும் அறிந்தார்.

ஆனால் இதற்குமேல் அவர் ஒன்றும் செய்ய வில்லை. போஸ்டன் நகருக்குத் திரும்பிவிட்டார். பின் ஒருநாள் வெல்சிடம் மயக்க மருந்து முறையில் பல்லைப் பிடுங்கிக்கொண்ட ஒரு பெண்மணியை மார்டன் காண நேரிட்டது. அவள் வெல்சின் வியப்புக்குரிய முறையைக் கூறி வேதனையில்லாமல்தான் பல்லை எடுத்துக்கொண்டதாகக் கூறினார்.

அவள் கூறியது மார்டனின் சிந்தையைக் கிளர்ந்தது. தானும் அதை ஆராய்ந்து பார்க்க எண்ணினார் மார்டன். நைட்ரஸ் வாயுவை சேகரிப்பதற்காக ஜாக்சன் என்பவரிடம் சென்று கேட்டார். அதன் தேவையின் அவசியம் என்ன என்று ஜாக்சன கேட்க, மார்டன், வெல்சின் புதியமுறையைத் தான் ஆராயப்போவதாகக் கூறினார். முன்பு வெல்ஸ் வந்து சந்தித்தபோது ஜாக்சன் எப்படி எள்ளி நகையாடினரோ அது போலவே மார்டனிடமும் பேசினார். ஆனால் அவரது பேச்சுக்கு மதிப்புதராமல் தனக்குத் தேவையான வாயுவைக் தந்துதவுமாறு வற்புறுத்தினார்.

நைட்ரஸ் ஆக்சைட் வாயு தன்னிடம் இல்லை என்றும் அதற்குப் பதிலாக அதே தன்மையைக்கொண்ட சல்ப்யூரிக் ஈதர் (Sulphuric Ether) என்ற வாயுவைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் ஜாக்சன் கூற மார்டன் அதை வாங்கிக்கொண்டு சென்றார்.

அன்றே, *1846*-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 ம் நாள், மார்டன் ஈதர் வாயுவைக் கொடுத்து **ஈபன் பிராஸ்ட்** என்பவரின் மேற்பல் ஒன்றை வேதனைக்கிடமில்லாமல் அகற்றினார். இம்முறை உண்மையில் வெற்றியளிப்பதைக் கண்டு மார்டன் வியப்படைந்தார்.

பல் எடுக்கவேண்டிவந்த பலருக்கும் ஈதர் வாயுவைக் கொடுத்து வேதனை ஏற்படாத வகையில் மருத்துவம் செய்தார். மார்டன் புதிய முறையின் மருந்தைக் குறிப்பிடாமல் ஒரு விசித்திரக் கலப்புப்பொருள் என்று கூறி தமது முறையை ரகசியமாகவே வைத்திருந்தார்.

பல தடவைகளில் பயன்படுத்தி வெற்றி பெற்ற மார்டன், மசாச்சுசெட்ஸ் பொது மருத்துவ விடுதியினரிடம் சென்று ரணமருத்துவ வேதனையை நீக்கி ரணமருத்துவத்தை எளிதாக்கவல்ல ஒரு நூதன முறை தன்னிடம் உள்ளதென்றும் அதைப் பயன்படுத்தி ரண மருத்துவம் ஒன்றை பலர் முன்னிலையிலும் நடத்திக் காட்ட விரும்புவதாகவும் கூறினார். மருத்துவ விடுதி அதிகாரிகள் மார்டனின் வேண்டுகோளுக்கிணங்கி அதற்கொரு நாளும் குறித்தனர். அக்டோபர் 16-ம் நாளன்று நடைபெறப் போகும் ஒரு ரணமருத்துவத்தில் மார்டன் தனது புதிய முறையை பயன்படுத்தலாமென அறிவிக்கப்பட்டது. இச்செய்தி போஸ்டன் நகர மருத்துவர்களிடையே பரவி ஒரு பரபரப்பை உண்டாக்கியது.

அக்டோபர் திங்கள் 16-ம் நாள். மாசாச்சுசெட்ஸ் மருத்துவ விடுதியின் ரணமருத்துவ அறையில் மருத்துவப் பேராசிரியர்கள். மாணவர்கள் ஊரின் சில பெரிய மனிதர்கள் யாவரும் கூடியிருந்தனர். நோயாளி அழைத்து வரப்பட்டான். அன்று அங்கு ரணமருத்துவராகப் பணியாற்றியவர் **வாரன்** என்பவராகும். மார்டன் தனது புதிய முறையைப் பயன்படுத்தி நோயாளியை தயாராக்க வேண்டும். பின் வாரன் ரண மருத்துவம் செய்யவேண்டும்.

ஆரம்பிக்கும் நேரம் வந்துவிட்டது. வாரன் எழுந்து முன்வந்தார். எப்பொழுதும் ரண மருத்துவம் செய்வதற்குமுன் அதன் தேவையைக்குறித்து விளக்கமான ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அதுபோன்று வாரன் அன்று வந்த நோயாளியின் கழலையை எடுக்க

அட்டைப்படம்

ஈதர் வாயுவை மயக்க மருந்தாகக் கொண்டு அதை முதன் முதலில் ரண மருத்துவத்தில் பயன்படுத்திக் காட்டி வெற்றி பெற்றவரும் ஹொரேஸ் வெல்சின் மாணவருமான **வில்லியம் தாமஸ் கிரீன் மார்டன்.**

மொழி—இந்திய வரலாற்றுக்கு முன்

மேற்கண்ட தலைப்பில் ஒரு ஆங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பில் ஒரு பகுதி இந்த இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் மறு பகுதி அடுத்த இதழில் வெளியாகும்.

—ஆசிரியர் :

வேண்டிய தன் அவசியத்தைப்பற்றியும் அதன்முறைபற்றியும் விளக்கிவிட்டுக் கடைசியாக, ரணமருத்துவ வேதனையை நீக்கவல்ல மருந்தை ஒருவர் கண்டு பிடித்திருப்பதாகக் கூறுவதாகவும், அதைச் செயல் முறையில் செய்துகாட்டப் போகிறார் என்றும் கூறி வாரன் சொற்பொழிவை முடித்தார்.

பின் வாரன் சுற்றிலும் பார்த்தார். எங்குமே மார்டன் காணப்படவில்லை. மார்டன் வரவில்லை! சில நிமிடங்கள் சென்றன. மார்டன் இன்னும் வரவில்லை. எல்லோரும் வாயிலை நோக்கியபடியே இருந்தனர். மார்டன் வருவதாகத் தெரியவில்லை. மார்டனுக்காகக் இனிக் காத்திருப்பதில் பயனில்லை என எண்ணி வாரன், வழக்கம்போல் சாதாரண முறையில் ரண மருத்துவத்தைக் கையாளவேண்டும் என்று முடிவுசெய்து எழுந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அந்தச்சமயத்தில் மார்டன், ஒரு பெரிய உருண்டை வடிவமுள்ள கண்ணாடி ஜாடியைக் கையிலேந்தியவண்ணம் உள் நுழைந்தார். மார்டனைத் தவிர அந்த ஜாடிக்குள் என்ன இருக்கிறதென்பது தெரியாது! மார்டனின் ரகசியமருந்து அதுதான் என்றுமட்டும் தெரிந்துகொண்டார்கள்.

வாரன் மார்டனை வரவேற்று "உங்களுடைய நோயாளி தயாராக இருக்கிறான்" என்று கூறினார்.

மார்டன் கண்ணாடி ஜாடியை நோயாளியருகே எடுத்துக்கொண்டுபோய் அதன் துவாரத்தை நோயாளியின் வாயில் வைத்து நன்றாக மூச்சை உள்இழுத்து விடும்படிக் கூறினார். நோயாளி அப்படியெ செய்தான். முதலில் கொஞ்சம் இருமலுடன் அசைந்தான் பின் அமைதியேற்பட்டது. அவனுடைய முகம் மலர்ச்சியுடன் தோன்றியது. நோயாளி தூங்கிவிட்டதைபோன்று காணப்பட்டான். மார்டன் இன்னும் ஜாடியை வாயனின்றும் எடுக்கவில்லை. முன்பு வெல்ஸ் அங்கு செய்து காட்டியபோது, சீக்கிரமே வாயுக் குழாயை எடுத்துவிட்டால்தான் மயக்கநிலை நோயாளியிடத்தில் அதிகநேரம் நிலைக்காமல் ரணமருத்துவம் முடியும் நேரத்தில் புலம்பியதாக வெல்ஸ் கூறிய விளக்கம் மார்டன் நினைவிற்கு வந்தது. அதனால் கொஞ்சநேரம் அப்படியே விட்டுவைத்தார் மார்டன. பிறகு ஜாடியை அவனுடைய வாயிலிருந்து எடுத்துவிட்டு பின் நகர்ந்து வாரனைநோக்கிக்கூறினார்.

"உங்களுடைய நோயாளி தயாராக இருக்கிறான்!"

முதியவர்கள், எதையும் தீர்மானிக்க முடியாதவர்கள்; ஒரு காரியத்தில் அளவுக்குக் குறைவான தீவிரத்தைக் காட்டுகிறவர்கள்; எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் நிச்சயமாகத் தெரியும் என்று சொல்லாதவர்கள்; எதிலும் ஒருவித வெடுவெடுப்பும் சந்தேகமும் கொள்கிறவர்கள்; சோர்ந்த மனமுடையவர்கள்; இருப்பதை இழந்துவிடக் கூடாதென்று நினைக்கிறவர்கள்; எதிலும் அச்சமுடையவர்கள்; கௌரவத்தைக் காட்டிலும் பணத்தையே பெரிதாகக் கருதுகிறவர்கள்; கூச்சமுடையவர்கள்; அதிக நம்பிக்கை யில்லாதவர்கள்; பழைய நினைவுகளைப் பற்றித் திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருப்பதில் திருப்தியடைகிறவர்கள்; தீவிரமாகக் கோபங்கொள்கிறவர்கள். ஆனால் அந்தக் கோபத்தைச் செயலில் காட்ட முடியாதவர்கள; எதிலும் பற்றுக்கொள்ளாதவர்கள்; எப்பொழுதும் ஏதோ ஒரு குறை சொல்லிக்கொண்டிருப்பவர்கள்.

—அரிஸ்டாட்டில்

மொழி-இந்திய வரலாற்றுக்கு முன்

முர்ரே. பி. எமனோ

✱

கிருத்து பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன், பிற்காலத்தில் சமஸ்கிருதம் என அழைக்கப்பட்ட இந்தோ-ஐரோப்பிய மொழியைப்பேசும் கூட்டத்தினர் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தனர். ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக மேற்கூறிய மொழிக்கொள்கையைத்தான் நாம் கண்டு வருகிறோம். இந்தக் கூட்டத்தினரின் படையெடுப்பைப் பற்றிய குறிப்பு எங்கும் காணப்படவில்லை. தங்கள் பழம்பெருமையில் மூழ்கி, பிறமொழிகளை வெறுத்து 'சமஸ்கிருதம் கடவுளர் மொழி' என்ற கூற்றை நிலைநிறுத்த இன்றும் பல இந்திய அறிஞர்கள் முயற்சி செய்கிறார்கள். கடவுளர் மொழி எனப்படும் சமஸ்கிருதம் மத்திய கிழக்குப்பகுதியில் இருந்தோ அல்லது உலகின் மேற்குப்பகுதியில் இருந்தோ நாடோடி இனத்தவரால் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும் எனக் கருதுகிறேன்.

இந்த நாடோடிகள், மொழிஅற்ற வெற்றிடத்திற்குள் நுழையவில்லை. கணவாயின் கிழக்குப்பகுதியில் அவர்கள் கண்டது என்ன? நமக்குக்கிடைத்துள்ள புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புகள், நிகழ்ச்சிகளின் காலத்தொகுப்பு இவைகள் உறுதியான அடிப்படையில் எழுந்தவைகளாக இருக்கும்வரை; சிந்துச்சமவெளி முழுதும் பரவியிருந்த உயர்ந்த நாகரிகத்தை அந்த நாடோடிகள் கண்டிருக்கவேண்டும். மொஹஞ்சதாரோ ஹாரப்பா நாகரிகம், அண்மைக்கிழக்கில் நிலவிய உன்னத நாகரிகமான எகிப்து, மெசெபடோமிய நாகரிகத்தின் குடும்பத்தைச் சார்ந்தவை. வளம்தரும் நதிகள்; அதனையேற்று நலம் பயக்கும் வயல்கள் உழவுத் தொழில் புரிந்து உன்னதமாக வாழ்ந்த மக்கள், சிறியதும் பெரியதுமான நகரங்களில் வாழ்ந்தனர். கட்டுப்பாடுகள் உடையதும் அண்மைக்கிழக்கு நகரங்களைப் போன்று அடிமை வழக்குக்கொண்டதாயும் அந்த நாகரிகம் விளங்கியது. எகிப்து, மெசெபடோமியா நகரங்களைப் போன்று ஆதாரபூர்வமான பொருள்களோ, காட்சியோ இதுவரை சிந்து சமவெளி நாகரிகத்தைப் பற்றிக்கிடைக்கவில்லை. மொஹஞ்சதாரோ-ஹாரப்பா நகரங்கள் இனியும் அம்மாதிரித் தகவல்கள் எதுவும் தரும் என்று நம்புவதற்கில்லை. ஹாரப்பா நாகரிகம் வளமாக வாழ்ந்த காலத்தை நினைவூட்டுவதாக இருக்கலாம். இந்நிலை குறித்து பிகாட் என்பவர் மந்தமாகவும், உயிரற்றதும், உற்சாகம் ஊட்டத்தகுதியற்றதாகவும் இருக்கிறதெனக்குறிப்பிடுகிறார்.

எப்படியிருந்தபோதிலும், தற்போதைக்கு நம்மைப் பொருத்தவரையில் சிந்து சமவெளி நாகரிகம் கல்வியறிவுடையதாய் இருந்தது என்பது நினைவில் கொள்ளவேண்டியதொன்றாகும். பொறிப்பு (Seals) களின் மேல் எழுதப்பட்டிருக்கும் குறில் எழுத்துக்கள், எகிப்தியர்களின் வரி வடிவ எழுத்துக்களுடனோ அல்லது மெசெபடோமியர்களின் ஆப்பு வடிவ எழுத்துக்களுடனோ ஒட்டியதாகஇல்லை. ஆனால் இவைகளெல்லாம் படங்கள் எழுதுவதிலிருந்து வளர்ந்த மொழிகள் என்று தெரியவருகிறது. படங்கள் மாதிரியும் அதே சமயத்தில் அமைப்பில் எழுத்துக்களாகவும் இருக்கின்றன. பொருள் விளங்காத எழுத்துக்களும் அது குறிக்கும் பொருளும் இதுவரை சந்தேகமற்ற விளக்கத்தைக் கொடுக்க முடியவில்லை.

இன்றுவரை செய்யப்பட்ட முயற்சிகளில் திராவிடக்குழு மொழியைச் சேர்ந்த ஒன்றாக இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி ஈராசுப் பாதிரியார் கூறுகிறார். இம்மொழிகள் தென் இந்தியா, மத்திய இந்தியா போன்ற இடங்களிலும், இதன் கிளை மொழியான பிராகுவி (Brahui) இந்து சமவெளிக்கு மேற்கிலுள்ள பலுச்சித்தான் மேட்டு நிலத்திலும் வழக்கில் இருக்கின்றன. ஈராசுப் பாதிரியாரின் இந்த முடிவை எதிர்த்துக் கூற காரணம் எதுவும் ஆதார பூர்வமாக இல்லை. திராவிட மொழிகள் பேசுவோரின் எண்

ணிக்கை ஏறத்தாழ 9 கோடியாகும். இந்திய துணைக்கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 4-ல் ஒரு பங்காகவும். உலகில் இந்த இனம் ஆறுவதாகவும் விளங்குகிறது. நில நூலின் அமைப்பும், மத்திய இந்தியாவில் திராவிட மொழி பேசுவோர்களுக்கும் படையெடுத்து வந்த சமஸ்கிருதத்தின் வழிவந்த இந்தோ-ஆரிய மொழி பேசுபவர்களுக்கும் இடையே அமைந்திருக்கும் எல்லைக்கோட்டின் இயல்பு, இந்தோ—ஆரிய மொழிக்கு முன் திராவிட மொழி கொஞ்சம், கொஞ்சமாக பின்வாங்கி வந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

தென் கோடியிலுள்ள திராவிடக்குழு மொழியான தமிழ் மொழி பேசுபவர்கள், சமஸ்கிருதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வட இந்தியப் பண்புகளுடன் கூடிய உயர்ந்த ஒரு பண்பாட்டை உடையதாக அந்தக் காலத்தில் விளங்கியது. சமஸ்கிருத நாகரிகத்தின் இலக்கணமும், நூலாராய்ச்சியும் தமிழ் மொழியிலிருந்தும், நூல்களிலிருந்தும் ஆரம்பக் காலத்தில் எடுத்தாளப்பட்டவையே. இந்திய வரலாற்று வல்லுநர்களால் விடுவிக்கப்படாமல் இருக்கும் எத்தனையோ புதிர்களைப்போல், இந்த முந்திய தமிழ் இலக்கியத்தின் காலம் வரையறுக்கப்படவில்லை. ஆனால் இந்தக் காலம் நிச்சயமாக கிருத்தவ ஆண்டின் துவக்கக் காலத்திற்கு பின்படாததாகும், கிருத்துவ ஆண்டிற்கு முற்பட்டதாகவுமே இருக்க வேண்டும். கி. பி. முதல் நூற்றுண்டில் கிடைக்கப்பெற்ற அரிக்கா மேடு (Arika Medu) கண்டு பிடிப்புகளிலிருந்து தமிழ் எழுத்துக்கள் தெரிய வருகின்றன. கி. மு. 3-ம் நூற்றுண்டில் தெற்கே மைசூர்வரை உள்ள அசோகச் சின்னங்களில் இந்தோ - ஆரிய மொழியில் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னங்கள், தெற்கில் சமஸ்கிருத பண்பாடு இந்த காலத்திற்கு முன்பே பரவி இருந்ததற்கு சான்று பகர்கின்றன. தங்கள் சமயத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு தெற்கு நோக்கி வந்து இங்கேயே தங்கிவிட்ட ஒரு சில படித்த பார்ப்பனர்களைத் தவிர வேறு யாருக்கு இந்தோ-ஆரிய மொழியில் அசோகர் பொறித்திருக்கக் கூடும்? தெற்கில் உள்ள பார்ப்பனர்களின் சமஸ்கிருதப் பண்பாடு, வடக்கிலுள்ள சமஸ்கிருத பண்பாட்டைக் காட்டிலும் பல்வேறு வகையில் மாறுபட்டும், தமிழர்களின் இடையே உள்ள சமஸ்கிருத பண்பாடு சில உயர்ந்தனவாகவும் இருப்பதற்குக் காரணம், பார்ப்பனர்களின் சமஸ்கிருத பண்பாடு தெற்கே பரவுவதற்கு முன் அங்கு பரவி நிலைத்திருந்த தமிழ் பண்பாடு எனலாம். இந்த முடிவிற்கு ஆதார பூர்வமான புதை பொருள்களும் சாட்சியங்களும் இதுவரை கிடைக்கவில்லை. இவையெல்லாவற்றையும் உற்றுநோக்கி ஒப்பிட்டுப் பார்க்குங்கால் சிந்துச் சமவெளி புதை பொருள்களில் உள்ளவை திராவிடக் குழு மொழிகளைச் சார்ந்தது தான் என்பது நம்பத்தகாத ஒன்றோ அல்லது இல்லது புனைவது ஒன்றோ அல்ல.

இவை எப்படி இருந்தபோதிலும் சிந்துச் சமவெளி புதை பொருள் எழுத்துக்களைமொழி பெயர்ப்பதிலும் விளக்கிப் பொருள் கூறுவதிலும் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் எல்லோராலும் நம்பத் தகுந்தவைகளாக இல்லை. இதுவரை கிடைத்துள்ள கைச்சார்த்து (doeuments)களின் பொருள் இன்னதென்று தெரியாத காரணத்தால்; இவற்றில் ஏதாவது ஒரு எழுத்துக்குக் கூறப்படும் பொருள் ஒரு தலை முடிவுடையதாகத் தோன்றுகிறது. அடுத்தடுத்து ஒரு குறிப்பிட்ட அடையாளத்துக்குக் கூறப்பட்ட ஒரு தலை முடிவான பொருள் (சுமேரியன் ஏடுகளின் உதவிகொண்டு கூறப்பட்டவை) உண்மையாகவே திராவிடக் குழு மொழிகளுடன் ஒத்துவரக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் எல்லாப் பொருள்களின் விளக்கமும் இம்முறையைக் கையாளுவதன் மூலம் கிடைக்கவில்லை. சிந்துச் சமவெளியில் கிடைத்த புதை பொருள்கள் எல்லாம் ஏறத்தாழ சிறு தொடர்கள் பொறிக்கப்பட்டவையாயும், அதிக அளவிலும் இருக்கின்றன. ஆகையால் ஒரு தலைப்பட்ட அபுதிக ஒலிகளையும் வெவ்வேறு பொருள்களையும் ஒரே அடையாளமுள்ள பொருளுக்குக் கொடுப்பதின் மூலம் எல்லாப் பொருள்களின் மேலும் உள்ள எழுத்துக்களைப் புரிந்துகொள்ள இயலும். சின்னஞ்சிறு அடையாளங்கள் பலவற்றிற்கு ஒருதலை முடிவாகக் கொள்ளப்படும் பல்வேறு பொருள்களும், அவற்றின் ஒலி மாற்றங்களும்; ஒரு தலை முடிவுக்கு வரையறுக்க முடியாமையும் சேர்ந்து, பல அறிஞர்களுக்கு இந்த முறையை ஒத்துக்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. சுருங்கக் கூறின், மேற்கண்ட ஒரு தலை முடிவான பொருள் கூறும் வழியில் அவரவர்களுக்கு விருப்பப்பட்ட பொருளைக் கொடுக்க முடியும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

ஹாரப்பா நாகரிகத்தின் மொழி, திராவிடக் குழு மொழியைச் சேர்ந்தததுதான் என்பதற்கு மேற்குறிப்பிட்ட வழி தவிர ஏனைய வழிகளும்

உண்டு. வடமேற்கு இந்தியா—அதாவது இந்து சமவெளியும் அதனைச் சார்ந்த பகுதிகளும் வரலாறு முழுவதிலும் அரசியல் பண்பாடு இவை இரண்டிலும் எவ்வளவுக்கெவ்வளவு கங்கை, தென்னிந்தியச் சார்புடையதாக இருக்கிறதோ அவ்வளவு அண்மைக் கிழக்குத் தொடர்புடையதாகவும் இருக்கிறது என்று 'டபிள்யூ, நார்மன், பிரௌன். என்பவர்'' ஐக்கிய நாடுகள், இந்தியா பாக்கித்தான்'' என்ற தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். மிகவும் முக்கியமான அந்தப் பகுதி கீழே குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

மிகவும் துர்க்குறியான சம்பவம். மிகப் பழமையானதும், திரும்ப நினைவில் வரக் கூடியதும் கபடக் கருத்துள்ளதும், ஒவ்வாததுமானவற்றை வடமேற்குப் பகுதிக்கும் எஞ்சியிருக்கும் உபகண்டத்திற்கும் இடையே வளர்த்துக் கொள்வதற்கு இந்தியப் பிரிவினை ஆக்கம் அளிக்கிறது. சிறிது கால ஊடல் ஒத்துழைப்பைத் தவிர அரசியலில் அன்று முதல் உபகண்டத்திற்கு எதிராக இருந்துகொண்டு தற்காப்புப் படையைப் பலம் குறையச் செய்து வந்திருக்கிறது. உரிமையின்றி, கணவாயின் வழியாக இடையிற் புகுந்த மக்கள் அங்கு நிலைநின்றவுடன், இந்தியாவில் இருக்கும் மற்ற மக்களைவிட, தாங்கள் விட்டு வந்த அந்தப் புதிய மக்களுடன் மதத்தை மையமாகக்கொண்டு ஒன்றுபட்டனர். இந்தத் தொடர்பு விடுபட்டு கிழக்கே வந்து அதிகநாட்கள் ஆன பிறகுதான் வெளித் தொடர்பு நின்று விடும். காலத்திற்குக் காலம் இஃதே காட்சிதான் காணப்படுகிறது. கி. மு. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு இந்து நதிப் பள்ளத்தாக்கில் தவழ்ந்த நாகரிகம், தற்காலத்து மேற்கு ஆசிய நாகரிகத்தைப் போன்றும், ஓரளவு பிற்காலத்திய வரலாற்று கங்கைச் சமவெளி இந்து நாகரிகத்தைப் போன்றும் இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு, பஞ்சாப் பகுதியில் வாழ்ந்து ரிக்வேதப் பாடல்களைத் தொகுத்துக்கொண்டிருந்த, முற்கால ஆரியர்கள் கிழக்கில் இந்தியாவில், அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களைக் காட்டிலும், மதம் மொழி இவற்றால் தங்களையொத்த இரானியர்களைப் போல் இருந்தனர். அந்த ஆண்டின் மத்தியப் பகுதியிலிருந்து ஏறத்தாழ இரு நூறு ஆண்டுகள் வரை வட மேற்குப் பகுதிவரைத் தங்களுக்குக் கப்பம் கட்டும் நாடுகளில் ஒன்றாக ஆக்கி வைத்திருந்தார்கள். பெர்சியாவைச் சேர்ந்த அக்கமேனியன் (Achaemenians) என்பவர்கள். அலெக்சாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்த பிறகு பரவிய கிரேக்க நாகரிகம் வடமேற்கு இந்தியா முழுவதும் பரவிய காரணத்தால் அந்தப் பகுதி பாதி இந்திய நாகரிகத்தைப் போன்றும் பாதி மேற்கத்திய நாகரிகத்தை யொட்டியும் இருந்தது. அதன்பிறகு இஸ்லாம் இந்தியாவிற்குள் நுழைந்ததும் வடமேற்குப் பகுதி மறுபடியும் பெர்சியா, பொக்காரா, மத்திய ஆசியா இந்த நாடுகளுடன்தான் அதிகத் தொடர்பு கொண்டிருந்ததே தவிர இந்தியாவுடன் அல்ல. முதன் முதலில் இஸ்லாம், பின்னரேதான் இந்தியன் என்ற முறையில் இருந்தது.

வட இந்தியப் பண்பாட்டுடன் பஞ்சாப் ஒத்திருந்ததில்லை. அப்படியிருந்தாலும் அந்த நாட்கள் அதிகம் இல்லை. அரசியல் ஒருமைப்பாடுகூட மிகமிகக் குறைந்த அளவில்தான் இருந்திருக்கிறது. கி. மு. மூன்றாவது நான்காவது நூற்றாண்டுகளில் மௌரியர்கள், கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் இந்தோ-கிரேக்க மன்னன் மினாந்தர், கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலும் இரண்டாவது நூற்றாண்டின் தொடக்கத்திலும் குஷானர்கள், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் டெல்லியில் ஆண்ட முகம்மதிய அரசர்கள், கி. பி. பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் நீண்ட காலம் மொகலாயர்களின் கீழ், 1849—1947 வரை ஒரு நூற்றாண்டுக் காலம் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழும் வடமேற்கு இந்தியப்பகுதி அரசியல் துறையில் எஞ்சிய இந்தியாவுடன் சிறிதுகாலம் ஒன்றாக இருந்ததே தவிர என்றும் இணைந்து இருந்ததில்லை.

மேற்கூறப்பட்டவை பண்பாட்டிற்கும் அரசியல் துறைக்கும் மட்டுமே பொருந்தி வருவதாயினும் நாம் மிகவும் அவசரப்பட்டு மொழிப் பிரச்னைகளை முடிவு செய்வதற்கு ஒரு எச்சரிக்கையாயிருக்கிறது. ஈரான் பகுதிகளில் வழங்கிவந்த மொழிக்கு நெருங்கிய தொடர்பும் உறவும் உடையதான சமஸ்கிருதம் (சமஸ்கிருதம் இன்றி வேறுபல மொழிகளும் உடைய) வடமேற்கு இந்தியப்பகுதிகளில்கூட பல நூற்றாண்டுகள்வரை அதிகம் பரவாத வரம்புக்கு உட்படுத்தப்பட்டும், எஞ்சிய

இந்தியப் பகுதிகளிலும் சமஸ்கிருத பேச்சு மொழி இல்லாமலும் இருந்த விபரங்களைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் இருக்கிறது, அதற்குச் சில காலத்திற்குமுன் அண்மைக் கிழக்கில் இருந்து படையெடுத்து வந்தவர் களின் மொழி—சுமேரியன் அல்லது எலெ மெடிக்போன்ற மொழிகளுடன் தொடர்பு டையது—சிந்து சமவெளியில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த வரலாறு. அண்மைக் கிழக்குப் படையெடுப்பாளரின் பெயரில்லாத இந்த மொழி சிந்து சமவெளியில் பேச்சு, எழுத்து வழக்கில் இருந்த பல மொழிகளில் ஒன்று என்ற கருத்து கைவிடப்படவில்லை. படையெடுத்து வந்தவர்களும் நாட்டை வென்றவர்களும் வழங்கிவந்த மொழி இது வரையிலும் பூர்வீகக்குடிகள் திராவிடக்குழு மொழிகளில் ஒன்றையோ அல்லது தற் பொழுது மத்திய இந்தியக்காடுகளில் ஒரு சிலரால் மட்டும் பேசப்படும் முண்டா என்னும் மொழியுடன் உறவுகொண்ட மொழியையோ பேசிவந்திருக்கின்றனர்.

சிந்தனைக்குரிய இந்நீண்ட கேள்வியை விடுத்து சமஸ்கிருதக் குறிப்புகளைக்காண லாம். இந்தக்குறிப்புகளில் சமஸ்கிருதம் பேசும் படையெடுப்பாளர்களுக்கும் இந்தியா வில் உள்ள மற்ற மொழிபேசும் கூட்டத்தின ருக்கும் இடையே உள்ள தொடர்புபற்றிய சான்றுகள் நிறைய உண்டு.

வெவ்வேறு மொழிபேசும் இரண்டு பிரி வினர் ஒன்றிற்கொன்று தொடர்புகொண்டு அத்தொடர்பும் சிறிதுகாலம் நீடித்திருந்தால் அந்த இரண்டு மொழிகளின் அமைப்பிலும் சில மாறுதல்கள் இருக்கும். ஒன்றிலிருந்து மற்றொன்று வார்த்தைகளை எடுத்துக்கொள் வதோ அல்லது இரண்டிலும் கொடுத்தலும் எடுத்தலும் இருப்பதோ தவிர்க்கமுடியாத ஒன்று. ஒலி முறைகளிலும், மூல எழுத்துக் கள் சிலவும், வார்த்தை அமைப்புமுறை சிலவும் மாறுவதுண்டு.

மேலைநாடுகளில் உள்ள சமஸ்கிருத வல்லு நர்கள் சமஸ்கிருதத்தில் உள்ள இந்தோ—ஐரோப்பியத் தொடர்பு இல்லாத சில பகுதி கள் திராவிட இனத்தையோ அல்லது முண்டா மொழி வகையைச் சேர்ந்ததாகவோ இருக்கக்கண்டனர். ஒலியைத் திருப்பித் தரும் (நுனி நாக்கை பின்நோக்கி கொண்டு வந்து வாயின் நுனியின்மேல் படும்படி உச்ச ரிப்பதால் எழும் மெய் எழுத்துக்கள்.) சமஸ் கிருத மெய்யெழுத்துக்கள் இந்தோ—ஐரோப் பிய மெய்யெழுத்துக் கூட்டத்தைச் சேர்ந்த வைகளின் பிரதியாக விளங்குகின்றன. எது எவ்வாறு இருந்தபோதிலும் இந்தோ ஆரிய மொழி வரலாற்றுப்படி ஒலியைத்திருப்பித் தரும் மெய்யெழுத்துக்கள் சேர்க்கை அதிக மாகக் காணப்படுகிறது என்பது உண்மை. அநேகமாக திராவிடக்குழு மொழிகள் எல் லாம் இதேவித மெய்யெழுத்துக்களை அதிக அளவில் உடையதாயிருக்கின்றன. முண்டா மொழியிலும் இஃதே எழுத்துக்கள் அதிகம் உண்டா என்பது துள்ளிதமாகத் தெரியா விட்டாலும், அவ்விதம்தான் இருக்கவேண் டும் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது. இதிலிருந்து பிற்கால இந்தோ—ஆரியர்கள் பூர்வகுடிகளின் பேச்சு முறைகளையும், பழக்க வழக்கத்தையும் கடன்வாங்கி வளர்ச்சி யடைந்திருக்கிறது என்றும், சில இந்தோ ஐரோப்பிய மெய்யெழுத்துக் கூட்டத்தில் ஆரம்ப காலத்தில் உள்ள (Retroflexes) வளர்ச் சியும் இதேவித வரலாற்றுக் காரணத்தால் ஆனவை என்று நம்புவதற்கு போதிய சான்றுகள் இருக்கின்றன. சமஸ்கிருதத்தில் உள்ள வினையெச்சத்தின் (Asbolutives or Gerunds) வளர்ச்சிக்கும் மேற்கூறிய கூற்று பொருந்தும். இந்த முற்றுப்பெறாத வினைச் சொல்லும் அதன் சொற்புணரிலக்கணத்தின் பயனும் திராவிட மொழிகளுடையதைப்போல் போல் இருக்கிறது. ஆகையால் மற்ற இந்தோ—ஐரோப்பிய மொழிகளுடன் ஒத்து வராத இந்த வேறுபாடுகள் திராவிடக்குழு மொழிகளின் செல்வாக்கின் காரணமாக ஏற் பட்டதுதான் என்று நாம் நிச்சயமாகக் கூற முடியும்.

முதன் முதலில் சமஸ்கிருத அகராதியின் மூலம் திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்ட வார்த்தைகள் எவை எவை என்று அறிதல் எளிதாக இருந்திருக்கவேண் டும். எவ்வாறுயினும் அதற்கும் அநேக தடைக்கற்கள் இருந்தன. முதலாவதும் முதன்மையானதுமான தடை, யூகித்தல். உன்னதமானதும், உயர்ந்ததும், உறுதியுள்ள வர்களாகவும், நல்ல பண்பாடு உடையவர் களாகவும் விளங்கிய சமஸ்கிருத மொழி பேசு பவர்கள் வடமேற்கு இந்தியாவழி நுழைந்த பொழுது பண்பாட்டில் பின்னடைந்து நாக ரிகம் குன்றி காட்டுமிராண்டிகளாக இருந்த மக்களைக் கண்டனர் என்றும் சமஸ்கிருதத்தில் இருந்தும் பிற்காலத்து இந்தோ-ஆரிய மொழி களில் இருந்தும் திராவிடமொழி கடன் வாங்கி யிருக்கவேண்டும் என்று பொதுவாகக் கூறி வாதத்திற்கு வராமலும், தக்க சான்றுகள் மூலம் மெய்ப்பிக்க முடியாமலும் ஏற்படுத்தப்

படும் யூகம். ஏனைய மொழிகளைப் புறக்கணித்து சமஸ்கிருத மொழிக்கு முடிசூட்டிய இந்தியநாகரிகம் மேலைநாட்டு அறிஞர்களை மேற்கூறியவாறு சமஸ்கிருதத்தைப் பற்றி நினைக்கத்தூண்டுகிறது. மேலும் ஆரம்ப காலத்தில் இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களுக்கு பிற்காலத்தில் மத்தியதரைப்பகுதி, மெசெபடோமிய, சிந்துசமவெளி ஆகிய இடங்களில் அகழ்ந்து காணப்பட்ட புதைபொருள் பற்றிய அதிசயமான, அறியஉண்மைகள் கிடைக்காமல் இருந்தன. மேற்கூறிய சூழ்நிலையில் தவறான முறையில் கணக்கிடப்பட்ட ஆண்டுகளை வைத்துக்கொண்டு இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பேசியவர்கள் பண்டைக்கிரேக்கர்கள், ரோமானியர்கள் போல வளமிக்கவர்களாகவும் பிற்காலத்தில் ஐரோப்பா முழுவதும் அதன்பிறகு நிலத்தில் பெரும்பகுதியையும் வெற்றிகொள்ளும் அளவிற்கு உன்னத நாகரிகத்தை உடையவர்களாகவும்யிருந்தார்கள் என்று கூறுவது இயற்கையே! ஐயப்பாட்டிற்கு இடமின்றி அவர்கள் நாடோடிகள், நாகரிகமற்ற கொள்ளைக்காரர்களாய், ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு இருந்தார்கள். பல நூற்றாண்டுகளாக பண்டையநாகரிகத்தைச் சிதைத்துச் சீர்குலைப்பதில் ஈடுபட்டு, அதே நாகரிகத்தால் நாகரிகமாக்கப்பட்டார்கள். கிரேக்கநாட்டில் உள்ளதைப்போலவும் பிற்கால ரோமானியப் பேராட்சியல் இருந்ததைப்போலவும் இதே நிகழ்ச்சிதான் இந்தியாவில் இருந்தது.

இந்த யூகம் நாளடைவில் மற்றொரு தடைக்கல்லிற்கு வித்தூன்றியது. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இயன்றஅளவு அதிகமான வார்த்தைகளுக்கு இந்தோ-ஐரோப்பிய மூலம் அறியும்முறையான எண்ணம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வளரலாயிற்று. எழுத்துக்களின் ஒலி, பொருள் இவற்றைக்கொண்டு அவசரமுடிவிற்கு வருவதன் மூலம் மேற்கூறிய முயற்சி பயன்படும். மேற்கூறிய முயற்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டது லத்தீன் மொழி. எந்த மொழியும் இதற்கு விலக்கல்ல, சமஸ்கிருதமும் அப்படித்தான். இந்தியாவில் பேச்சு, எழுத்து வழக்குகளில் இருக்கும் மொழியில் மேற்கூறிய ஆராய்ச்சி செய்வது மன்னிக்க முடியாத தவறாகும். ஏனெனில் திராவிடக்குழு மொழிகளை மேல்நோக்காகக் காண்பவர்கள் கூட பிறசொற்கள் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். குறைந்தஅளவு திராவிட மொழியிலிருந்து சமஸ்கிருதத்தில் கையாளப்படுவதைக் காணலாம்.

மூன்றாவது தடைக்கல், நீண்டகாலமாக நிலவியிருந்த அறியாமையும் இந்தோ-ஐரோப்பிய மொழிவல்லுநர்களின் ஊக்கமின்மையுமேயாகும். அவசரப்பட்டு அவர்களைக் காய்வதும்கூடாது. திராவிட மொழிகள் எளிதான மொழிகள்அல்ல. அவைகளில் பெரும்பாலும் காடுகளில் ஆதிகுடிகளால் பேசப்படுபவை. அவைகள் பற்றிய உண்மையான நிலைஅறிவிக்கப்படுவதில்லை. அந்த நான்கு இலக்கிய மொழிகளிலும் ஏராளமான இலக்கியங்கள் உண்டு.

கடைசியாக நான்காவது தடையாக இருப்பது இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களிடையே அடிப்படையான பொருள்கள் பற்றி நேருக்கு நேர்பார்க்குமிடத்து பொதுவாக ஏற்படும் எச்சரிக்கையுமாகும். இவ்வழியில் அவர்கள் செயல் கண்டிக்கத்தகுந்ததல்ல. ஏனெனில் பாஸ்க் (Basque) தவிர, ஐரோப்பிய மொழிகளின் வரலாற்றில் இழைந்துவரும் அடிப்படை, மொழிகளின் சிதறுண்ட தொகுப்பாகவும் நன்றாகத்தெரிவிக்கப்படாததும் (உதாரணமாக செல்டிக்கின்காலிச்) ஏடுகளிலில்லாததும் (இலிரியன்), புரியாததும் (எட்ரூச்கன்) ஆகும். எவ்வாறாயினும், சமஸ்கிருதத்தில் திராவிட அடிப்படை, குறிப்புகள், எளிதில் அறியக்கூடியதாக அதன் குழுமொழிகளுள் அடங்கி இருக்கின்றன. இந்த வழியில் வல்லுநர்கள் ஊக்கமும்உற்சாகமும்கொண்டு உழைத்தால் இவற்றிலுள்ள திராவிட மூலம் கண்டு அறியப்படலாம்.

மேற்கூறிய தடைக்கற்கள் காரணமாக மிகச் சிலரே திராவிட மொழியிலிருந்து சமஸ்கிருத மொழி எடுத்துக்கையாளும் சொற்களை அறுதியிட்டுக் கூற முன்வந்தனர். ஊக்கம் கொண்டு உழைத்தவர்களும் முறையான வழியின்றியும், வெவ்வேறு உதாரணங்களுடனும், குறிப்பிட்ட முறையில் வந்திருக்கக்கூடும் என்று ஒருகுறிப்பிட்ட கொள்கையைக் கொண்டு ஒப்பு நோக்கும் முறையுமின்றி இருந்ததால் அவர்களுடைய முடிவுகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்தது. யூலன்பெக் (Uhlenbeck) (*1898-1899.*)கின் சமஸ்கிருத வார்த்தைகளின் ஒலி உருவ வளர்ச்சி அகராதியும், வேல்ட் (Walde), போக்கோர்னி (Pokorny) (*1930-1932*) இவர்களின் இந்தோ ஐரோப்பிய வார்த்தைகளின் ஒலி, உருவ வளர்ச்சி அகராதியும் குண்டெர்ட் (Gundert)

(*1869*), கிட்டல் (Kittel) (*1872-1894*), கால்டுவெல் (Caldwell) (*1856,1875*) ஆகிய அறிஞர்களின் கருத்துக்கள் முழுவதும் அப்படியே புறக்கணித்துவிட்டன.

அண்மைக்காலத்தில் ஜீலுஸ்ப்ளோக் (Jules Bloch) (*1925,1930,1934.*) அதற்குமுன் செய்யப்பட்ட முயற்சியில் சிலவற்றை விளக்கினர். *1940*-ல் டி. பர்ரோ (T. Burrow) (*1945,1946, 1948*) மிக முக்கியமானதும் தொடர்ந்தும் வெளிவந்த கட்டுரைகளில் முறையான கொள்கைகளைக்கொண்டு சுமார் ஐந்நூறு சமஸ்கிருத வார்த்தைகளுக்கு திராவிடமூலத்தைக் கண்டுபிடித்துள்ளார். (விபரம் குறிப்பு 1-ல் காண்க.) நானும் நண்பர் பர்ரோவும் சேர்ந்து பணியாற்றும் திராவிட எழுத்துக்களின் வரலாறு பற்றிய அகராதியில் அதிகமான வார்த்தைகளும் விளக்கங்களும் சேர்க்கப்படும். *1953*-ல் செர்மனியில் மான்பிரட் மைரோபர் (Manfred Mayrhofer) வெளியிட ஆரம்பித்த சமஸ்கிருத எழுத்துக்களின் வரலாறு பற்றிய அகராதி சமீப காலத்தியக் கருத்துக்களையேற்று வெளிவரும்.

பர்ரோவின் கூற்றுப்படி பார்த்தாலும்கூட அவரால் குறிப்பிடப்பட்ட எல்லாஎழுத்துக்களும் எடுத்தாளப்பட்ட சொற்கள் என்று கூறிவிடமுடியாது. தகுதிவாய்ந்த வல்லுநர்கள் பலர் தங்கள் உழைப்பு முழுவதும் செலவழித்து பொதுவானமுறை. தனித்தனி எழுத்துக்கள், முதலியவைபற்றி அறியவேண்டும். இன்றைய அறிஞர்களின் உழைப்பால் இந்திய வரலாற்றுக்கு முந்திய மொழி பற்றி அறியத் தேவையானதும் எல்லோராலும் எளிதில் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான ஒரு வழி பிறப்பது உறுதி என்றுமட்டும் நாம் கூற முடியும்.

ஏற்கனவே தற்காலிகமான நடவடிக்கைக்கான வழிவகைகள் சில வகுக்கப்பட்டிருக்கின்றன. எதிர்பார்ப்பதற்கு ஏற்ப, எடுத்தாளப்பட்ட சொற்களில் பெரும்பகுதி பண்டைய இந்தோ - ஐரோப்பியப்பகுதியில் இல்லாத, இந்தியாவில் மட்டும் விளைந்துவந்த திணையின் செடிவளம், மலர்வளம் இவைபற்றிய பெயர்களாகவே இருக்கின்றன. உதாரணமாக நறுமணமுள்ள அன்னுசிப்பழம் (குறிப்பு *1* சொல் *1*) ஏலக்காய் (சொல் *2*), வீட்டுப்பல்லி (சொல் *3*) மயில் (சொல் *4*) வெள்ளை எறும்பு அல்லது கரையான் (சொல் *5*) இந்தச் சொற்களில் சில சமஸ்கிருத இலக்கியத்தில் இராமாயண காலத்தில் இருந்து காணப்படுகின்றன. ஏனையவைகள் மொழி அகரவரிசையில் இருக்கின்றன. (இந்தச்சொற்களில் இருந்து திராவிடச்சொற்கள் பிறந்தன எனத்தெரிவிப்பதற்காக இருக்கலாம்!) ஆனால் பொதுவான பொருள்உள்ள நீரா, (தண்ணீர், சொல் *6*) போன்ற சில சொற்களும் இராமயண காலத்தில் இருந்து வழக்கில் இருக்கின்றன. சில பெயர்ச்சொற்கள் திராவிடமூலத்திலிருந்து பிறந்தவை என்பது நமக்கு நிச்சயமாகத்தெரிகிறது. உதாரணமாக, வேதகாலத்தின் பிற்காலத்துத்தோன்றிய விரகாதையின் காவியத்தலைவன் நளனுக்கு' நல்லமனிதன்' எனப்பொருள்தரும் திராவிடச் சொல்லைக் கொண்டபெயரும் இருந்ததாகத்தெரியவருகிறது. மலேயாவின் தெற்கு மலைத்தொடர்களுக்கு 'மலை' என்ற திராவிடச்சொல்லிருந்து பிறந்தசொல் ஒருபெயராக இருந்திருக்கிறது. (சொல் *7*, *8*) நாடகத்தின் நடுவே வரும் வியப்பிடைச் சொல்லான 'ஏ' கூட திராவிடமூலத்திலிருந்து பிறந்ததாகத்தான் இருக்கவேண்டும். (சொல் *9*) இந்தோ-ஐரோப்பிய சொல் வரலாற்றுக்கு உட்படாத 'கலா' என்ற சொல், 'கல்' என்ற திராவிட வினைச் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம். சமஸ்கிருத மொழிபேசுபவர்கள் இந்தியாவிற்கு வருவதற்குமுன் இங்கு உயர்ந்த பண்பாடு நிலவியிருந்தது என்பதை நோக்குங்கால் மேற்கூறிய கருத்து தவறு என்று தள்ளிவிடுவதற்கில்லை.

சில சொற்களில் அதிக அளவு அக்கரையும் பற்றும் இருப்பதற்கு காரணமாய் அவைகள் ஆதிகாலத்தில் சமஸ்கிருதமொழியின் ரிக்வேதத்தில் குறிப்பிடப்படுகின்றன. அதிகக் கலப்படமுடையதாய் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட 'மயில்' போன்ற இருபதுசொற்களுடன் இந்திய இனத்திற்குறிய தனிச்சிறப்புள்ள காணற்கரிய ஓரிரண்டு (முத்திரைகளையும்) பெயர்க்குறிப்புகளையும் பர்ரோ கண்டுபிடித்திருக்கிறார். அவைகளில் பெரும்பாலானவை பொதுத்தன்மை உடையது. உதாரணமாக கலா (களம்,சொல்.*10*.), பழா (பழம்,சொல்*11*.) 'காணு' என்ற சொல் 'காண்' என்ற திராவிட வினைச்சொல்லின், எதிர் மறைப் பெயர் உரிச்சொல்லினின்றும் பிறந்த ஒன்றாகும். இந்தோ ஐரோப்பிய சொல் வரலாற்றின் அரிதான சொற்களில் ஒன்றான 'ப,'பல' என்ற சொல் (இச்சொல்லின் ஒரே நேர் மரபு சார்ந்த ஏனைய சொற்களின் பொருள் அதே மாதிரி இல்லை.) பல்கிப் பரவிநிற்கும் திராவிடக்குழு மொழிகளின் வல்லமை, வலிமை (சொல்.*12*.) என்பன வற்றைக் குறிக்கும் 'வல்' என்ற சொல்லிலிருந்து பிறந்திருக்கவேண்டும். திராவிடத்

திற்குமுந்திய 'வ' என்ற சொல் 'ப' என்று ஒரு மொழியில் திரிபடைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. (காலம் சரியாகக் கணக்கிடப்படவில்லை.) இந்தோ, ஐரோப்பிய ஆரிய சொல்லான 'ப' என்ற சொல்லின் உதாரணங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளும் வரை இந்தோ ஐரோப்பியர்கள் மேற்கூரிய கூற்றை ஒப்புகொள்ள மாட்டார்கள்.

ரிக்வேத காலத்து உதாரணங்களையோ, அல்லது அவைகளில் ஏதேனும் ஒன்றோ ஒப்புக்கொள்ளப்பட்டால் அதுவே சமஸ்கிருத மொழி பேசுபவர்கள் இந்திய மண்ணில் காலடி வைத்த நூற்றுண்டிலேயே திராவிடர்கள் வடமேற்கு இந்தியப் பகுதியில் அதாவது சிந்து சமவெளி தீரத்தில் இருந்தார்கள் என்பதற்கு சான்று பகர்வதாகிறது. இது ஒன்றே ஹாரப்பா நாகரிக மொழியில் அல்லது மொழிகளில் திராவிடச்சாயல் காண்பதற்கு முழுச் சான்ருகாது. இருந்தபோதிலும் அந்த தற்காலிகக் கோட்பாட்டிற்கு, ஊகத்திற்கு நம்மை இழுத்துச்செல்கிறது.

முண்டா மொழியைப்பற்றி சில குறிப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதற்கு அம்மொழி பேசுபவர்களுக்கும், பிற இரண்டு மொழிக்குழுவினருக்கும் தொடர்பு இல்லாதது காரணமல்ல. முண்டா மொழியைப்பற்றி விரிவாகவோ, ஒப்புநோக்கியோ நமக்கு நிச்சயமாகத் தெரிவதெல்லாம் மிகமிகக் குறைவு. முண்டா மொழியிலிருந்து சமஸ்கிருத மொழி எடுத்தாண்டசொற்களை விளக்குவதில் மிகுந்த பேரார்வம் கொண்டுசெய்த முயற்சி வேடிக்கையும் முறையற்றதுமான வழிகளை அடிப்படையாகக்கொண்டு இருக்கிறது. சில சமஸ்கிருதச்சொற்கள் இந்தோ-ஐரோப்பிய மூலமோ அல்லது திராவிட மொழியின் மூலமோ இல்லாதிருந்தால் அவைகள் முண்டா மொழியினின்றும் பெறப்பட்டவைகளாக இருக்கக்கூடுமாலும் அவைகளை ஒப்புநோக்கி முடிவுகூறக் குறிப்பிட்ட கொள்கைகிடைக்கும் வரையில் அந்தக்கருத்துக்களில் அதிகநாட்டம் செலுத்தாமல் இருப்பது நல்லது. (குறிப்பு 2.)

பாரிஸ் நகரில் பெயற்பெற்ற ஒரு பெரிய முடிதிருத்து நிலையம் இருந்தது. அதில் ஒரு சிற்றுண்டிச் சாலையும் இணைக்கப்பட்டு மதுவகைகளும் கிடைக்கும்படியாக வசதி செய்யப்பட்டிருந்தது. அப்பொழுது ஏற்பட்டிருந்த தொழிற்சட்டப்படி வேலைநேரம் எட்டுமணியாகக் குறைக்கப்பட்டிருந்தது. வேலை முடிந்தவுடன் வேலையாட்கள் எதையும் கவனியாமல் வெளியேறிவிடுவர்.

ஒருநாள் காலை 4மணி இருக்கும். முடிதிருத்து நிலையத்தின் உரிமையாளர் தனது மாளிகையில் உறங்கிக்கொண்டிருந்தார். டெலிபோன் 'கண கண' வென ஒலித்தது. உரிமையாளர் விழித்துக்கொண்டு டெலிபோனைக் கையில் எடுத்தார்.

"ஹலோ?"

"ஹலோ! உமது வாடிக்கையாளனை பீட்டர் பேசுகிறேன். உமது கடையை எத்தனை மணிக்குத் திறக்கப் போகிறீர்கள்?"

"ஏன் எல்லோருக்கும் தெரியுமே! 9 மணிக்குத்தான் திறக்கப்படும்."

"அதுதான் நானும் நினைத்தேன். இன்றுமட்டும் கொஞ்சம் முன்னதாகத் திறக்கமுடியாதா?"

"முடியாது சார்! சட்டம் குறுக்கே நிற்கிறது. நீங்க 9 மணிவரையில் உள்ளே நுழைய முடியாது.

"அது சரிதான்! நான் உள்ளே இருக்கேன்! வெளியே போகணும்...!"

சங்ககால இசை

திரு. க. வெள்ளைவாரணன்

★

செந்தமிழ் வளர்ச்சியிற் பேரார்வமுடைய பாண்டிய மன்னர்கள் புலவர் பேரவையாகிய தமிழ்ச்சங்கத்தை நிறுவக் கல்விப் பணிபுரிந்த காலம் சங்க காலம் எனப்படும். இற்றைக்கு ஆயிரத்தொண்ணூறாண்டுகளுக்கு முற்பட்ட அக்காலப்பகுதியில் நம்தமிழ் மொழி சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்த செய்தி, இறையனார் களவியலுரையிலும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிலும் முச்சங்கங்களின் வரலாறு கூறுமிடத்து நன்கு விளங்கப் பெற்றுள்ளது.

தமிழ் மொழிக்கே யுரியனவாகப் பண்டைத் தமிழ் மக்கள் வகுத்துணர்த்தியவை இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்த் துறைகளாகும். நமது கண்ணிற்கும் கருத்திற்கும் புலனாகும் பொருள்களின் இயல்பினை உள்ளவாறு விளக்குதற்கேற்ற சொல்லமைப்பினையுடையது இயற்றமிழ், சொல்லக் கருதியவற்றைக் கேட்போர் ஆர்வமுடன் ஏற்றுக்கொள்ளும்படி இன்னோசையுடன் புலப்படுத்தும் மொழிநடை இசைத்தமிழாகும். மனத்திலெண்ணிய எண்ணங்கள் மெய்ப்பாடுகளால் உடம்பின் புறத்தே விளங்கித்தோன்றும் வண்ணம் நடித்துக் காட்டுதற்கு அமைந்த மொழி நடை நாடகத்தமிழெனப்படும். இவை மூன்றும் மக்களது மனவளர்ச்சியையும், மொழியின் இனிமையையும், செயலின் ஆற்றலையும் இனிது வளர்க்கும் நிலையில் அமைந்துள்ளமை அறிந்து மகிழத்தக்கதாகும்.

மனமொழி மெய்களின் தொடர்புபெற்று வளர்ந்த முத்தமிழுள் நடுவணதாய் விளங்கும் இசைத்தமிழ், மனவளர்ச்சியின் பயனாய் மொழியின் இனிமையைப்புலப்படுத்திச் செயலாற்றலை மிகுதிப்படுத்தும் தனிச்சிறப்புடையதாகும். மிடற்றுப்பாடலும், குழல்யாழ் முதலிய இசைக்கருவிகளின் ஒலியும் அவற்றின் கால அளவினைப் புலப்படுத்தும் தாளமும் ஆகிய இவை மூன்றும் ஒத்திசைந்து இயங்குவதே இசையாகும். இயற்றமிழ்ப் பாவினோடு இயைத்துரைக்கப்பட்ட இசையினை நெஞ்சு, கண்டம், நா, மூக்கு அண்ணம், உதடு, பல், தலை என்னும் எட்டிடங்களிலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகை இசைத்தொழில்காளல் உருவாகப் பண்ணிச் சீர்படுத்திப் பாடப்பெறுவது பண்ணாகும். இசையும் பண்ணும் ஆகிய இவற்றின் இயல்பினை,

> " பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்
> மேவார் பெருந்தாளம எட்டானும்—பாவாய்
> எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்
> படுத்தமையாற் பண்ணென்று பார்."

எனவரும்பழம் பாடலால் இனிதுணரலாம். இயற்றமிழ்ப்பாவினோடு இசையினையியைத்துப் பாடுதல் என்பது ஓவியத்திற்கு நிறந்தீட்டுதல் போல்வதோர் செய்கையாகும். 'நிறந்தோன்ற' எனச் சிலப்பதிகார வுரையாசிரியர் வழங்கியிருத்தலைக்கூர்ந்து நோக்குங்கால் நிறம் என்ற தமிழ்ச்சொல் இராகம் என்ற பொருள் பண்டைநாளில் வழங்கிய தென்பது நன்கு புலனாகும்.

நானிலத்தவராகிய மக்கள் அனைவரும் தத்தம் நிலத்திற்குச் சிறப்புரிமையுடைய யாழ், பண்,பறை முதலிய இசைக்கூறு பாடுகளைச் சிறப்பு முறையில் வளர்த்து மகிழ்ந்த செய்தி சங்க நூல்களால் இனிது விளங்கும். வண்டு, கிளி, குயில் முதலியவற்றின் இன் குரலினைக் கேட்டுணர்ந்த நம்முன்னோர், இயற்கையில் தோன்றும் அவ்வினிய ஓசைகளையொத்த ஒலிகளைத் தம்மிடற்றிலிருந்து எழுப்பக்கற்றுக் கொண்டனர். தம் செவிக்கு இன்பந்தரும் ஓசைப்பரப்பினைக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசைகளாகப் பகுத்து ஆராய்ந்து அவற்றின் சுருதி நிரல்களைக்கொண்டு பல்லாயிரக்கணக்கான இன்னிசையுருவங்களைத் தன் நுண்ணுணர்வினாற் படைத்து இவ்வுலக வாழ்க்கையை இசை நலத்தாற் சுவையுடையதாக உயர்த்தினார்கள். "இசையாவது நரப்படைவால் உரைக்கப்பட்ட பதினோராயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்றாகிய ஆதியிசைகள்" எனச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர்

கூறுவதனை நோக்குங்கால் நம்தமிழ் முன்னோர் இசைத்துறையில் வளர்ச்சி பெற்று விளங்கிய செய்தி இனிது விளங்கும்.

"இசைத்தமிழ் நூலாகிய பெருநாரையும் பெருங்குருகும் பிறவும் தேவ இருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயமும் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன" என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். சிகண்டி என்னும் செந்தமிழ் முனிவர் இயற்றிய இசை நுணுக்கமும், அறிவனார் செய்த பஞ்சமரபும் ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதியமும், பாண்டியன் மதிவாணனார் செய்த மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் ஆகிய இசைநாடகத்தமிழ் நூல்கள் அடியார்க்குநல்லார்காலம்வரை தமிழ்நாட்டில் பயிலப்பெற்று வந்தன என்பதும் இவற்றை ஒருபுடை யொப்புமையாகக்கொண்டே அடியார்க்கு நல்லார் முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு விரிவுரை செய்தாரென்பதும் சிலப்பதிகார உரைப்பாயிரத்தால் நன்கு புலனாகும். அடியார்க்குநல்லார் காலத்தே வழங்கிய இந்நூல்களும் பிற்காலத்தே மறைந்தன. இவற்றிலிருந்து மெற்கோளாகக் காட்டப்பெற்ற ஒருசில நூற்பாக்களே இந்நாளில் எஞ்சியுள்ளன. அடியார்க்குநல்லார் உரையிலும் இசைத்தமிழ்த்திறம் விளக்கும் கானல் வரியுரை இந்நாளிற் கிடைக்கவில்லை.

இப்பொழுது நமக்கு கிடைத்துள்ள தமிழ் நூல்களிலே பண்டையிசைத்தமிழ் மரபினையும் குரல், யாழ்முதலிய இசைக்கருவிகளையும், இசைபாடும் முறையினையும், பண்ணும் திறங்களுமாகிய இசை நலங்களையும் குறிப்பிடும் பகுதிகள மிகப்பலவுள்ளன. குமரியாறு கடல் கோளால் அழிவதற்குமுன் இடைச்சங்கத் தொடக்கத்திலே இயற்றப்பெற்ற தொல்காப்பியம் என்னும் இயற்றமிழ் நூலானது இன்னளவும் சிதைவின்றிவழங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். செய்யுளாராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்பெறும் இசைநூல் முடிபுகள் சிலவும் கூத்து நூல் முடிபுகள் சிலவும் இந்நூலிற் கூறப்பெற்றுள்ளன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை திருக்குறள் ஆகிய பழந்தமிழ் நூல்களிலும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் விளங்கிய இளங்கோவடிகள் இயற்றிய இயலிசை நாடகப்பொருட் டொடர்நிலையாகிய சிலப்பதிகாரத்திலும் இசைத்தமிழ் பற்றிய சிறந்தநூன்முடிபுகள் பலஇடம் பெற்றுள்ளன.

பண்டைநாளிலே இசைவளர்த்த குடும்பத்தார் பாணர் என்னும் பெயரினராவர். இப்பாணர்பழந்தமிழ்க்குடிகளென்பது, "துடியன் பாணன் பறையன் கடம்பனென்றின் நான்கல்லது குடியுமில்லை" என வரும் 335-ம் புறப்பாடலால் இனிது புலனாம். இன்னோர் வாசித்த யாழ்க்கருவியின் அமைப்பும் அக்கருவியிலே இசைக்கப்பெற்ற இசைநலங்களும் இப்பாணர்களது வாழ்க்கை முறையும் பாட்டுத்தொகையுமாகிய பழந்தமிழ்நூல்களிலே விரிவாகப் பேசப்பெற்றுள்ளன.

இற்றைக்கு ஆயிரத் தெண்ணூறாண்டுகளுக்குமுன்பு சோழ நாட்டின் பெரிய துறைமுகமாக விளங்கிய காவிரிப்பூப்பட்டினத்திலே மருவூர்ப்பாக்கத்திலே, இசை வளர்க்கும் பெரும் பாணர்களுக்கு இருக்கையமைந்திருந்த தென்பதும் அக்காலத்துவாழ்ந்த இசையறிஞர்கள், தூளைக்கருவி வாசிப்போர், தோற்கருவிவாசிப்போர், நரம்புக்கருவியிசைப்போர், கண்டத்தாற்பாடுவோர் என நால்வகைப் பிரிவினராக அமைந்து இசை வளர்த்தார்கள் என்பதும்,

"குழலினும் யாழினும் குரல்முத லேழும்
வழுவின்றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்"

எனவரும் சிலப்பதிகாரத்தொடரால் இனிது விளங்கும் ஆடல்மகள் நாடகஅரங்கிற்புகுந்து ஆடும்போது ஆடலாசிரியன், இசையாசிரியன், இயற்றமிழ் வல்லகவிஞன், தண்ணுமையாசிரியன் என்னும் இவர்கள் அவளது ஆடலுக்குத் துணைபுரிந்த முறையினைச் சிலப்பதிகார அரங்கேற்று காதையில் இளங்கோ வடிகள் விரித்துக் கூறியுள்ளனர்.

சிலப்பதிகாரத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனஏழிசைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இவைமுறையே ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என் இக்காலத்தில் வழங்கும் இசைச்சுரங்களைக் குறிப்பன எனப் பின்னுள்ளோர் பலரும் கருதிவந்தார்கள். பண்டைத்தமிழ் நூல்களில் குரல் முதல் ஏழிசைகளுக்கும் உரியவாகக்கூறப்பட்ட இலக்கணங்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்துகுரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி தாரம் என்னும் இவ்வேழும் முறையே மத்திமம், பஞ்சமங், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என இக்காலத்தில் வழங்கப்படும் இவ்வேழிசைகளையுங் குறித்து வழங்கிய பழைய தமிழ்ப்பெயர்களாகும் என யாழ்நூலாசிரியர் அருண்மிகு விபுலாநந்தஅடிகள் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

ஆண் மக்களது கண்டத்தின் ஓசை காந்தார சுரத்தை யொத்ததென்பர் ' தாரம் ' என்னும் அச்சுரத்தின் வழியோசையாக 'உழை' என்ற ஓசையும், குரலின் வழியோசையாக 'இளி' என்ற ஓசையும், இளியின் வழியோசையாக 'துத்தம்' என்ற ஓசையும், துத்தத்தின் வழியோசையாக 'விளரி' யும், விளரியின் வழியோசையாகக் 'கைக்கிளை' யும் பிறக்கும் என்பது,

" தாரத்துட்டோன்றும் உழை, உழையுட்டோன்றும்
ஓருங்குரல் குரலினுட்டோன்றிச்-சேரு மிளி
யுட்டோன்றும் துத்தத்துட்டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும்பிறப்பு "

எனவரும் பழைய பாடலால் நன்குபுலனாகும் இவ்வாறு கிளைமுறையாக (ஐந்தாம் சுரமுறையாக) ஏழிசைகளும் பிறக்கும் எனமுதற் கண்டுணர்ந்த பெருமை தமிழ்மக்களுக்கேயுரியதென அறிஞர்கூறுவர்.

இவ்வேழிசைகளையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழ் மக்களால் வளர்க்கப் பெற்றதே இசைத்தமிழாகும். இசைக்கலையைப் பிறழாத நிலையில் வளர்ப்பன குழல் யாழ் முதலிய இசைக்கவிகளேயாகும். மூங்கிலில் வண்டுகள் துளைத்த துளைகளின்வழியே காற்றுப்புகுந்து இயங்க, அத்துளைகளிலிருந்து உண்டாகிய இன்னோசையினை மிகப் பழைய காலத்திலே கண்டு கேட்டுணர்ந்த பண்டைத்தமிழ் மக்கள், தம நுண்ணறிவின் திறத்தால் முதன்முதல் அமைத்துக்கொண்ட இசைக்கருவி வேய்ங்குழலாகும். வில்லின் கண்ணே விசைத்துக் கட்டப்பட்ட நாணிலிருந்து ஓசையின் இனிமையை யுணர்ந்து குமிழங் கொம்பில் மரல் நாரால் தொடுத்துக்கட்டப்பெற்ற பல விற்களை ஒன்றாகச் சேர்த்து அமைத்துக் கொண்ட பழைய இசைக்கருவி வில்யாழ் என்பதாகும். இதன் இயல்பினைப் பத்துப் பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையிலே ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். வரையறுக்கமுடியாத மிகப்பழங்காலத்திலே அமைக்கப்பெற்ற இவ்வில்யாழினை அடிப்படையாகக்கொண்டே சீறியாழ், செம்முறைக் கேள்வியென்னும் சகோடயாழ் முதலாக ஆயிர நரம்புடைய பெருங்கலம், என்னும் பேரியாழ் ஈறாகச் சிறந்த நரம்புக்கருவிகள் பலவும் உய்த்துணர்ந்து அமைக்கப்பெற்றன.

ஒவ்வொரு சுரத்திற்கும் தனித்தனி நரம்பு கட்டப்பெற்றது பழந்தமிழர்கண்ட யாழ் எனனும் இசைக்கருவியாகும். ஒரு நரம்பிலே பல சுரங்களையும் வாசித்தற் கமைந்தது பிற்காலத்து வீணைக்கருவியாம். இவ்வீணைக் கருவி ஒரேமுறையில் தொடர்ந்து செல்லும் தொடரிசையினை மட்டுமே வாசித்தற்குரியது, பழந்தமிழர் பயன்படுத்திய யாழ்க்கருவியோ, தொடரிசையுடன் பலரும் சேர்ந்துபாடும் பண்ணாகிய ஒத்திசையினையும் வாசித்தற்கேற்ற அமைப்புடையதாகும். தொடரிசையினைமட்டும் வாசித்தற்குரிய வீணைக்கருவியைக் காட்டிலும் தொடரிசையினையும் ஒத்திசையினையும் ஒருசேர வாசித்தற்கு அமைந்த யாழக்கருவி பெரிதும் சிறப்புடையதென்பது சொல்லாமலேயே விளங்கும். அக்காலத்தில் யாழிற் கட்டப்பட்ட இசைநரம்பு மாட்டு நரம்பேயாகும். அந்நரம்பு வெயில் மழை முதலியவற்றால் ஏற்படும் நெகிழ்ச்சி இறுக்கம் காரணமாக இசை வேறுபடுமாதலால் பண்டைத் தமிழ்மக்கள் குழலோசையின் துணைகொண்டே யாழ் நரம்புக்கு இசை கூட்டினார்கள்.

தமிழ்மக்கள் குழலும் யாழும் ஆகிய இசைக் கருவிகளின் துணைகொண்டு பல்வேறு இசை நுட்பங்களை வெளியிட்டுள்ளார்கள் என்பது முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தினாலும் அதன் உரைகளாலும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய சங்க இலக்கியங்களிற் காணப்படும் இசைநூற் குறிப்புக்களாலும் நன்கு துணியப்படும். பழந்தமிழ்மக்கள் வாசித்து மகிழ்ந்த யாழ் என்னும் இசைக் கருவி தமிழ்மக்களது விழிப்பின்மையால் பிற்காலத்தில் வழக்கற்று மறைந்தது, வழக்கற்று மறைந்த யாழ்க்கருவியின் இயல்பும், அதனகண இசைக்கப்பெற்ற பன்னிருபாலைகளின் பயனும், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் என்னும் நாற்பெரும் பண்களின் இயல்பும், அவற்றின் வழியமைந்த நூற்றுமூன்று பண்களின திறனும் ஆகியவற்றை இக்காலத்திலும் நன்கறிந்து பயன்படுத்திமகிழும் வண்ணம் சேரமுனிவராகிய இளங்கோவடிகள் அறிவுறுத்திய இசைத்தமிழ் நுட்பங்களை அருள்மிகு விபுலாநந்த அடிகளார் தாம் இயற்றிய இசைத்தமிழ்நூலாகிய யாழ்நூலில் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார்கள். அடிகளாரது ஆராய்ச்சியால் உருப்பெற்ற பழந்தமிழ் இசைக்கருவிகளாகிய முளரியாழ், செம்முறைக் கேள்வியாகிய சகோடயாழ், பெருங்கலமென வழங்கும் ஆயிரநரம்புடைய பேரியாழ் முதலிய பழந்தமிழ் இசைக்கருவிகளை முறையாக அமைத்து அக்கருவிகளின் வழியாகப் பண்டைத்தமிழர் கையாண்ட சங்ககால இசைநலங்களை உலகமெலாம்பரவச்செய்தல் தமிழ்மக்களாகிய நமது கடமையாகும்.

மதுரைத்தமிழ்ச் சங்கப் பொன் விழாமலர் 1956

வினாவும் விளக்கமும்

வினா: கில்லிகன் (Gilligan), ஹக்ஸ்லி (Huxley), அலெக்ஸிஸ் காரல் (Alexis Carrel), டூ நூய் (DuNouy); ஐன்ஸ்டீன் (Einsteni), சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் (Sir. James Jeans), சர். ஜே. சி. போஸ் (Sir. J. C. Bose), சர். சார்லஸ் ஷெரிங்டன் (Sir. Charles Sherington), மதாம் க்யூரி (Madam Curie), சர். சி. வி. இராமன் (Sir. C. V. Raman) போன்ற உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் எல்லாம் கடவுள் உண்டு என்று சொல்லுகிறார்கள். விஞ்ஞான ரீதியாக விளக்கியும் காட்டுகின்றார்கள். அவர்களிலும் தாங்கள் அறிவாளிகள் என்ற எண்ணமா? அல்லது அவர்களை நீங்கள் மறுக்கின்றீர்களா? எந்தப் பிரமாணத்தால், எக்காரணம் காட்டி, கடவுள் உண்மையை மறுக்கின்றீர்கள்?

[இது அருள்நெறித் திருக்கூட்டத்தாரின் பதினெட்டாவது வினா.]

விளக்கம்: வினாவில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் அறிவியல் அறிஞர்கள் எல்லாம், மதவாதிகள் கடவுளைப்பற்றி என்ன கருதுகிறார்களோ அப்படியேதான் கருதுகிறார்களா? என்பது அவர்களுடைய கூற்றுகளைத் தனித்தனியே எடுத்துவைத்து ஆராய்ந்துபார்த்து அறியவேண்டியதொன்றாகும். 'கடவுள்' என்பதற்கு அவர்கள் என்ன பொருள் கொள்ளுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான், அவர்கள் "கடவுள் உண்டு" எனறு சொல்லுகிறார்களா? அல்லது "கடவுள் இல்லை" என்று சொல்லுகிறார்களா? என்பது கண்டறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அருள்நெறித் திருக்கூட்டத்தார் கடவுளைப்பற்றி என்னகருதுகிறார்களோ, எப்படிக் கொள்ளுகிறார்களோ அப்படியேதான் அந்த அறிவியல் அறிஞர்களெல்லாம் கடவுளைப் பற்றிக் கருதுகிறார்கள், கொள்ளுகிறார்கள் என்று கூறிவிடமுடியாது. அல்லது அவர்கள் எல்லோரும் கடவுளைப்பற்றி ஒரேமாதிரியாகத்தான் கருதுகிறார்கள் என்றும் கூறிவிடமுடியாது. அவர்களது கூற்றுக்களைத் தனித்தனியே எடுத்துவைத்துக்கொண்டு பார்த்தால், ஒன்றிற்கொன்று மாறுபட்டனவாகவும், ஒன்றையொன்று மறுத்துரைப்பனவாகவும், ஒன்றையொன்று பொய்யெனக்காட்டுவனவாகவும், ஒன்றோடொன்று பொருந்திவராதனவாகவும்தான் இருக்கக்காணலாம். அருள்நெறித் திருக்கூட்டத்தார் கடவுளைப் பற்றி என்ன கருதுகிறார்களோ அப்படியேதான் அந்த அறிவியல் அறிஞர்கள் எல்லாம் கருதுகிறார்கள் என்று ஒப்புக்காக வைத்துக் கொண்டாலும், அவர்களெல்லாம் "கடவுள் உண்டு என்று நம்புகிறார்கள்" என்றுதான் சொல்லமுடியுமே ஒழிய, "கடவுள் உண்டு என்று அறிவியல் வழிநின்று புலப்படுத்திக் காட்டுகிறார்கள்" என்று சொல்ல முடியாது. அவர்கள் கடவுள் உண்டு என்பதை அறிவியல் வழியில் புலப்படுத்திக் காட்டுகிறார்கள் என்பது உண்மையாக இருக்குமேயானால், அவர்கள் எல்லாம் புலபபடுத்திக்காட்டிய வேறுபல அறிவியல் உண்மைகளை உலகம் எப்படி ஏற்றுக்கொண்டுள்ளதோ அப்படியே இந்த உண்மையையும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். உள்ளபடியே அறிவியல் வழியில் "உண்டு" என்று புலப்படுத்திக் காட்டும் ஒன்றை, "இல்லை" என்று அவ்வளவு எளிதாக யாரும் மறுத்துரைக்கவோ, வேறு வகையில் பொருள்கொள்ளவும் வேறு ஒருவரால், அதுவும் வேறு ஒரு அறிவியல் அறிஞரால் முடிகின்றது என்றால், பின்னர் அது ஒரு அறிவியல் உண்மையாக இருக்கமுடியாது. கடவுளைப்பற்றி சில அறிவியல் அறிஞர்கள் பேசுகிறார்களே என்றால், தாங்களாகவே தனி அறிவு—ஆற்றல்—பண்பு நிறைந்ததாகக் கற்பித்துக்கொண்ட 'கடவுள்' ஒன்று இருக்க வேண்டும் என்று ஊகித்து நம்புகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டுமே ஒழிய, அறிவியல் வழியில் அதனைப் புலப்படுத்திக்காட்ட முடிகிறது என்று சொல்ல முடியாது. அப்படி அவர்களெல்லாம் புலப்படுத்திக்காட்டியிருந்தால், எல்லா அறிவியல் அறிஞர்களும் அவர்களோடு ஒத்த கருத்துடையவர்களாகத் திகழ்ந்திருப்பார்கள். வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அறிவியல்

அறிஞர்களைப்போன்று, அறிவும், ஆற்றலும், பெயரும், புகழும் பெற்றுள்ள எவ்வளவோ அறிவியல் அறிஞர்கள் கடவுளைப்பற்றிய மத வாதிகளின் கருத்துக்களை மறுத்துரைத்தும், அவைகளைப் பொய்யெனப் புலப்படுத்திக் காட்டியும், அவர்களின் வாதங்களைச் சுக்கு நூருகப் பிளந்தெறிந்தும், மதவாதிகள் கூறு கிறபடியான 'கடவுள்' இல்லை என்பதற்கான காரணகாரிய விளக்கங்களைத் தந்தும் உள் ளனர். எடுத்துக்காட்டாக, டார்வின் (Darvin), லியெல் (Lyell), ஹெர்பெர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer). ஹக்ஸிலி (Huxley), டின்டால் (Tyndall), சேம்பர்ஸ் (Chambers), வாலஸ் Wallace), டைலர் (Tylor). லப்பாக் (Lubbook), ஜியார்டனே புருனே (Geordano Bruno) போன்ற அறிவியல் அறி ஞர்களும், வால்டயர் (Voltaire), ஜோசப் மெக்காபி (Joseph Macabe), கிரான் அலென் (Grand Allen), சர் லெஸ்லி ஸ்டீபன் (Sir Lesoie Stephen), லிவெ லின் பௌஸ் (Llewelyn Powys), ஹால்டேன் (Hal-dane), கோவான்ஸ் வைட் (Gowans Whyte), தாமஸ் பெயின் (Thomas Paine), ரிச்சார்டு கிரானெட் (Richard Garnett), ஜூலியன் எஸ்.ஹக்ஸ்லி (Julian S. Huxley), சி. டி. கோர்காம் (C. T. Gorham), எவான்ஸ் பெல் (Evans Bell), ஹோவெல் ஸ்மித் (Ho-well Smith), லெவிஸ் ஸ்பென்ஸ் (Lewis Spence), சர் ஜே. ஜி. பிரேஸர் (Sir J. G. Frazer), மார்ஜோரி போவென் (Marjorie Boveen), ஹெச் ஜி. வெல்ஸ் (H. G. Wells) சர் ஜான் மெக்டோனெல் (Sir John Macdonell), வின்வுட் ரீட் (Winwood Reade), டாப் சன் கொல்லட் (Dobson Collect), சார்லஸ் பிராட்லா (Charles Bradlaugh), ஹெச். பிராட்லா பன்னர் (H. Bradlaugh Bonner), அனதோல் பிரான்ஸ் (Ana-tole France), சாமுவல் பட்லர் (Samuel Butler), எப். டென்னிசன் ஜெஸ்ஸி (F. Tennyson Jesse), மார்க் டுவெயின் (Mark Twain), சார்லஸ் டப் (Charles Duff), ஜெரால்டு புல்லெட் (Gerald Bullett), பெர்னட் ஷா (Bernard Shaw), ராபர்ட் கிரீன் இங்கர்சால் (Robnrt Green Ingersoll) போன்ற சிந்தனையாளர்களும் மதவாதிகள் கூறிடும் 'கடவுளை' அழுத்தந்திருத்தமாக மறுத்துரைத்துள்ளனர்.

அண்டத்திலுள்ள தோற்றங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படைக் காரணமாக, ஆனல் நம்மால் இன்னதென்று மனமொழி மெய்களால் அறிந்துகொள்ள முடியாத ஆற்ற லுக்குக் 'கடவுள்' என்று பெயர்; மனமொழி மெய்களைக் கடந்து நிற்பதால் அதற்குக் 'கடவுள்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது; அந்த அளவில் மட்டுமே அதனை நாம் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுமே யானல், அத்தகைய 'கடவுளை' உண்மை என ஒப்புக்கொள்ளப் பகுத்தறிவியக்கத்தினராகிய நாம் தயங்குவதில்லை. இந்தவகையில் அழைக் கப்படும் 'கடவுளை' அறிவியல் அறிஞர்கள் பலரும் ஏற்றுக்கொள்ளவே செய்கின்றனர்.

பகுத்தறிவியக்கத்தினராகிய நாமும் சரி, நாம் சுட்டிக்காட்டியுள்ள அறிவியல் அறிஞர் களும், பிறபேரறிஞர்களும் சரி மதவாதிகள் புகன்றிடும் 'கடவுளை' ஏற்கவே மறுக்கிருேம். ஏனெனில், தூபதீப நைவேத்தியங்களையும், வந்தனைவழிபாடுகளையும், படையல் காணிக் கைகளையும், கோயில்குளங்களையும், நிலபுலங் களையும், சொத்துச் சுதந்திரங்களையும், தேர் திருவிழாக்களையும், மந்திர தந்திரங்களையும், மனைவி மக்களையும், ஆடை அணிகலன்களை யும், நாச்சியார்களையும், தேவடியாள்களையும் அடியார்களையும் விரும்பியுள்ளதாகக் கூறப் படும் கடவுளை, தன்னை வழிபடுபவர்களுக்கு மட்டுமே வரம் அளித்துத் தன்னை வழி படாதவர்களுக்குத் தீங்கு இழைப்பதாகக் கூறப்படும் கடவுளை, மக்கள் வாழ்த்துக் கூறி வரவேற்று அழைத்தால் மட்டுமே வருவார் இல்லையானல் வரமாட்டார் என்று கருதப் படும் கடவுளை, தன்னை வழிபடும் மதத்தவர் கள் அல்லாத பிற மதத்தினர், அவர்கள் எவ்வளவுதான் நல்ல பண்புகளுடையவர்க ளாக இருந்தபோதிலும் அவர்களுக்கு மோட் சம் அளிக்க முன்வரமாட்டார் என்று சொல் லப்படும் கடவுளை நாமும் சரி, மூடநம்பிக் கைக்கு அறிவைப் பறிகொடுக்காத அறிவியல் அறிஞர்களும் சரி "இல்லை! இல்லை!! இல்லை!!! என்றுதான் அழுத்தந்திருத்தமாக மறுத் துரைக்கிருேம்.

"அவர்களிலும் தாங்கள் அறிவாளிகள் என்ற எண்ணமா?" என்று திருக்கூட்டத் தார் கேட்கிருர்கள். திருக்கூட்டத்தார் சுட் டிக் காட்டிடும் அறிவியல் அறிஞர்களைக் காட் டிலும் அறிவியல் துறையில் மிக்க அறிவு படைத்தவர்கள் என்று பறைசாற்றி கொள் ளும் ஆணவக்காரர்கள் அல்லர் நாம். அவர் களின் அறிவியல் அறிவை நாம் மிகவும் மதிக் கத்தான் செய்கிருேம். உள்ளபடியே எல்லாத் துறையிலும் எல்லோரைக் காட்டிலும் மிக மேம்பாடான அறிவு படைத்தவர்கள் தாம் தான் என்று எண்ணிக்கொள்ளும் ஆணவம், சமயச் சார்புடையவர்களிடத்தில்தான் காண முடியுமே ஒழிய, பகுத்தறிவாளர்களிடத்தில் காண்பதரிது. திருக்கூட்டத்தார் உணர்த் திடும் அறிவியல் அறிஞர்களில், யாரேனும் மதவாதிகள் கூறிடும் 'கடவுளை' அப்படியே முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிருர்கள்

என்றால், அத்தகையோர் காரணகாரிய விளக்கத்திற்கு இடந்தராமல் நம்பிக்கைக்கு முழு இடமும் தருகிறார்கள் என்று பொருள். நம்பிக்கை ஏற்பட்டுவிட்ட இடத்தில் வாதத்திற்கு இடந்தரமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள் என்றால், அதில் வியப்படைவதற்கில்லை. அதுவும் உலக இயல்பாகத்தான் இருந்து வருகிறது.

பொதுவாக மதவாதிகள் நம்பும் 'கடவுளைப்' பகுத்தறிவியக்கத்தினராகிய நாம் மட்டும் மறுத்துரைக்கிறோம் என்று திருக்கூட்டத்தார் கருத வேண்டாம். அவர்கள் சுட்டிக் காட்டிடும் அறிவியல் அறிஞர்களைப் போன்று ஒத்த அறிவும், ஆற்றலும், பெயரும், புகழும் படைத்த எவ்வளவோ அறிவியல் அறிஞர்கள் மதவாதிகளின் 'கடவுட்' கொள்கையை அழுத்தந்திருத்தமாக மறுத்துரைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட, கடவுள்' நம்பிக்கையற்ற அறிவியல் அறிஞர்களின் கூற்றுக்களை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்தெறிவதோடுமட்டுமல்லாமல், அவர்களைத் திணறடிக்கும் வகையில் பகுத்தறிவு வினாக்களையும் எழுப்பி அவர்களை அடங்க வைக்கிறார்கள்.

"எந்தப் பிரமாணத்தால், எக்காரணம் காட்டி, கடவுள் உண்மையை மறுக்கின்றீர்கள்?" என்று திருக்கூட்டத்தார் வினவுகின்றனர். கடவுளைப்பற்றி மதவாதிகள் கூறிடும் அறிவும், ஆற்றலும், உள்ளமும் பண்பும் ஐம்புலனறிவுக்கும் பகுத்தறிவுக்கும் எவ்வகையிலும் பொருந்திவராத காரணத்தால், காரண காரிய விளக்கங்காட்டி அவற்றை நாம் மறுக்கிறோம். நமது மனம் மொழி மெய்களைக் கடந்து அண்டத்தின் பொருள்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் அடிப்படைக் காரணமாக நிலவும் ஆற்றலுக்குப் பெயர்தான் 'கடவுள்' (கட+உள் = கடவுள்) என்றால், அந்த அளவில் நிலவும் 'கடவுளை' நாம் ஒப்புக்கொள்ள மறுப்பதில்லை. மற்ற கடவுள்களெல்லாம் கற்பனையே ஒழிய உண்மையானவை அல்ல. ஒப்புக்காக வேண்டுமானால், 'அறிவே கடவுள்' 'அன்பே கடவுள்', 'இயற்கையே கடவுள்', 'உண்மையே கடவுள்' என்றவாறெல்லாம் கொள்ளலாம்.

வினா: தி. மு. கழகத்தவர்கள், தேர்தலில் போட்டியிட்டு எல்லா இடங்களிலும் காங்கிரசை முறியடிப்போம் என்று தைரியமாகச் சொல்லுவது தானே! அவர்களுக்குப் பொதுமக்கள் ஆதரவு ஏது?" என்று திரு. காமராசர் கூறுகிறாரே அது பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: தி. மு. கழகம் வீண் வீரப்புப் பேசும் கழகம் அல்ல; உள்ளதை—தேவையை—இயன்றதை அமைதியாகவே எடுத்துரைக்கும் கழகம் ஆகும். கழகம், தான் பெற்றிருக்கும் செல்வாக்கையும், பெறவேண்டிய செல்வாக்கையும் தெளிவாக அறிந்திருப்பதோடு, பாடுபடவேண்டிய இடைவெளி நெடுந்தொலைவுடையதாக இருக்கிறது என்பதையும் நன்கு உணர்ந்தே இருக்கிறது. கழகத்திற்குத் தேவையான செல்வாக்கு ஏற்படாததற்குக் காரணம், கழகக் கருத்துக்களைப் பொது மக்கள் வெறுத்தொதுக்கிவிட்டார்கள் என்பதல்ல, கழகக் கருத்துக்களைப் பொதுமக்களிடம் பரப்புவதற்கேற்ற வாய்ப்புக்களையும், வசதிகளையும் கழகம் பெறுமலிருப்பதேயாகும். கழகம் தன்னால் இயன்ற அளவுக்குச் சிறிது சிறிதாக ஆனால் உறுதியாக முன்னேறி வருகிறது என்பதை எவரும் மறுக்க இயலாது.

கழகம் பல இடங்களில் போதுமான அளவுக்கு வேரூன்றவில்லை என்பதை நாமே நன்கு அறிந்திருப்பதோடு, இப்பொழுது இந்நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் கொள்கையைவிட, சாதிப்பற்று—மதப்பற்று—பணபலம்—அதிகாரம்—தந்திரம்—சூழ்ச்சி ஆகியவைகளே முக்கிய அளவுகோல்களாக இருக்கின்றன என்பதையும் உணருவோம். இந்த அளவு கோல்களை முறையல்லாத முறைகளிலெல்லாம் பெறும் சனநாயகமற்ற போக்கும்—வாய்ப்பும்—மனத்துணிவும் காங்கிரசிடத்தே முழுக்க முழுக்க உண்டு என்பதையும் நாம் அறிவோம். எனவேதான், "காங்கிரசை எல்லா இடங்களிலும் முறியடிப்போம்" என்று கூறிடும் வீண் வீராப்புப் பேச்சைக் கழகம் கொண்டிருக்கவில்லை. அப்படிக் கூறுவதற்குத் தேவைப்படுவது அசட்டுத் தைரியந்தான. வீண் வீராப்பையும், அசட்டுத் தைரியத்தையும் முழுக்கமுழுக்கத் தன்னுடைமையாக்கிக் கொண்டிருப்பது காங்கிரசே தவிர கழகம் அல்ல.

வெற்றி தோல்விபற்றிக் கவலைப்படாமல் சனநாயகக் கடமையை நிறைவேற்றுகிறோம் என்ற எண்ணத்திலேயும், எவ்விதப் போட்டியும் இல்லாமல் தாங்கள் நினைத்தபடி எளிதாகச் சட்டமன்றம் புகுந்துவிட முடியும் என்று எண்ணிக்கொண்டிருக்கிற காங்கிரசின் மமதைக்கு உலைவைக்க வேண்டும் என்ற கருத்திலேயும், இன்றுள்ள சூழ்நிலையில் ஆளும் கட்சியினராக ஆகும் வாய்ப்பு ஏற்படாவிட்டாலும், நாணயமும், நேர்மையும், உண்மையும், உறுதியும், திறமையும், தகுதியும்

படைத்த சிறந்த எதிர்கட்சியினராக இருந்து, ஆளும் கட்சியினரை நேரிய வழியில் ஆட்டிப் படைக்கலாம் என்ற எண்ணத்திலேயுந்தான் தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்துள்ளது. அதில் அசட்டுத் தைரியத்திற்கோ, வீண் வீராப்புக்கோ சிறிதும் இடமில்லை.

பொதுமக்களின் அமோகமான ஆதரவு தம்முடைய காங்கிரசுக்குத்தான் உண்டு, நாட்டில் தம்முடைய கட்சிதான் பலம் பொருந்திய கட்சி, தம்முடைய கட்சிதான் எல்லா இடங்களிலும் வெற்றி பெறும் என்றெல்லாம் தோழர் காமராசர் சென்ற பொதுத் தேர்தலினபோது வீராப்புப் பேசினர். சென்ற பொதுத்தேர்தலின்போது சென்னை மாநிலத்தில் மொத்தம் 375 சட்ட மன்ற இடங்களில் 152 இடங்களைத்தான் காங்கிரசால் பிடிக்க முடிந்தது. 223 இடங்களில் காங்கிரசு தோல்வியுற்றது; காங்கிரசுக்காரர்களின் சொற்களில் கூறவேண்டுமானல், காங்கிரசு "மண்ணைக் கவ்விற்று", காங்கிரசு முகத்தில் "கரி பூசப்பட்டது" காங்கிரசுதான் அசட்டுத் தைரியமும், வீண் வீராப்புப் பேசி, மூக்குடைபட்டது என்பதற்குச் சென்ற தேர்தலின் முடிவே சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இப்பொழுது இவ்வளவு வீராப்புப் பேசிடும் காமராசரின் காங்கிரசு 'பத்தினித்' தன்மையோடாவது வாழ முடிந்ததா என்ருல் அதுதான் இல்லை. தோழர் காமராசரின் காங்கிரசு தன் வெட்கம்—மானம்—சூடு — சொரனை ஆகிய அனைத்தையும் உதிர்த்துவிட்டு, எந்த இராமசாமிப் படையாச்சியும், மாணிக்கவேலரும், அவர்களைச் சார்ந்தோரும், சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரசின் முகத்தில் கரி பூசினர்களோ, அதே இராமசாமிப் படையாச்சியையும், மாணிக்கவேலரையும், பிறரையும் ஆரத் தழுவிச் 'சோரம் போய்' தான் அமைச்சர் அவை அமைக்க முடிந்தது. இப்படிப்பட்ட 'அவலட்சணத்' தன்மைகள் பலவற்றையும் தம் கட்சியிலே கொண்டிருக்கும் தோழர் காமராசர்தான் வீராப்புப் பேசி மகிழ்கிருர்! மகிழட்டும்! காலம் விடை யிறுக்கும்!

தி. மு. கழகத்தவர்களாகிய நாம் வெற்றிக்காக வெறி பிடித்து அலைபவர்களுமல்லர், தோல்விக்காகத் துடை நடுங்கித் துயரப்படுபவர்களுமல்லர்.

பெரிய – சிறிய கடிகாரம்

★

கடிகாரம் முதன்முதல் ஜெர்மனி நாட்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது, கடிகாரங்களில் மிகப் பழமையானதாக விளங்குவது நூரம்பார்க்கிலுள்ள ஒரு கடிகாரம் ஆகும். அது 1504 ஆம் ஆண்டில் ஹேல் (Hele) என்பவரால் செய்யப்படடது.

உலகிலுள்ள கடிகாரங்களில் மிகப் பெரிய கடிகாரம் அமெரிக்காவில் ஜெர்ஸி நகரத்தில் ஒரு பெரிய கட்டிடத்தில் வைக்கப்பட்டிருப்பதாகும். அந்தக் கடிகாரத்தின் குறுக்களவு 50 அடி. அது 1963 சதுர அடி பரப்பை அடைத்துக்கொண்டிருக்கிறது. அதனுடைய நிமிடம் காட்டும்முள் 27 அடி 3 அங்குலம் நீளம் உடையது. மணிகாட்டும் முள் 19 அடி 6 அங்குலம் நீளம் கொண்டது. அந்தக் கடிகாரம் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதள்நாள் பகல் 12 மணிக்கு நிலைநாட்டப்பட்டு, ஓடும்படி விடப்பட்டது.

உலகிலேயே மிகச்சிறிய கடிகாரம் சுவிட்ஜர்லாந்திலுள்ள ஒரு கடிகாரத் தொழிற்சாலையில் செய்யப்பட்டதாகும். இது $\frac{1}{2}$ அங்குலநீளமும் 3/16 அங்குல அகலமும் கொண்டது. இது பதினைந்துகற்கள் பதிக்கப்பட்ட கடிகாரமாகும். இந்தக் கடிகாரம் $\frac{1}{4}$ அவன்சுக்கும் குறைவான எடையைக்கொண்டது.

மலர்க்காடு

" கன்னற் பொருள்தரும் தமிழே
நீயோர் பூக்காடு நானோர் தும்பி "

மணிமகுடம்:

[ஆசிரியர்: கலைஞர் மு. கருணாநிதி. பக். 164. விலை: ரூ 1-8-0. கிடைக்குமிடம்: முத்துவேல்பதிப்பகம், திருச்சி.]

இது ஒரு நாடகநூல். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 'மேரிகாரல்லி' என்பார் எழுதிய 'டெம்போரல் பவர்' என்னும் நவீனத்திலுள்ள பாத்திர அமைப்பை எடுத்துக்கொண்டு, தம் சிந்தனையில் முகிழ்த்தெழுந்த கருத்துக்களை அவற்றோடு சேர்த்துச், செந்தமிழ்த் தேனில் அழகுற குழைத்து 'மணிமகுடம்' என்ற பெயரில் தமிழ்ப் பெருமக்களுக்குத் தந்துள்ளார். அரசியல் மாற்றத்திற்கும், பொருளாதார ஏற்றத்திற்கும் சமுதாயப் புரட்சித்தத்துவம் அடிப்படையாக நின்று உறுதுணை புரிவதாகும் என்பதைக் கலைஞர் இந்நாடகத்தின் மூலம் தெளிவுபடுத்திக் காட்டுகிறார். மதிபீடம்-ஆட்சிப்பீடம்-பிரச்சாரபீடம் ஆகிய இம்மூன்றுக்கும் மக்களுக்கும் நடைபெறும் போராட்டமே 'மணிமகுட' நாடகம், இது, உணர்ச்சியும், கவர்ச்சியும், விறுவிறுப்பும், அழகும், இனிமையும் பொருந்த நடிப்பதற்கு ஏற்ற நல்ல நாடகமாகும். இதனை முத்துவேல் பதிப்பகத்தார் நல்லதாளில், அழகான முறையில் அச்சியற்றி கண்கவரும் அட்டையோடு வெளியிட்டுள்ளார்கள். படித்து மகிழ்வதற்கும், நடித்து மகிழ்வதற்கும் ஏற்றநாடகம் இது. தமிழ்ப் பெருமக்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்வார்களாக!

*   *   *

சொர்ண மாளிகை

[ஆசிரியர்: சேரன். பக். 168. விலை: ரூ 1-12-0. கிடைக்குமிடம்: செங்கதிர்ப் பதிப்பகம், 28. ஏழுகிணறு தெரு, சென்னை-1]

இது ஒரு துப்பறியும் நவீனம். மேல்நாட்டைப்போல நமது நாட்டில் துப்பறியும் நவீனங்கள் மிகுதியாக வெளிவருவதில்லை. துப்பறியும் நவீனம் பொதுவாகப் படிக்கப்படிக்கச் சுவை பயந்துகொண்டே செல்லும்பண்பு நிறைந்ததாகும். அந்தப் பண்பை இந்த நவீனம் கொண்டிருக்கிறது. இதன் ஆசிரியர் தோழர் சேரன் அவர்கள் ஒரு முற்போக்கு எழுத்தாளர். எனவே முற்போக்குக் கருத்துக்களை இதில் குழைத்துத் தந்துள்ளார். நூல் நல்லமுறையில் வெளியிடப்பட்டுள்ளது.

*   *   *

தம்மபதம்

[ஆசிரியர்: புத்தர். தமிழாக்கம்: ப. ராமசாமி. பக். 128. விலை: ரூ. 1-4-0 கிடைக்குமிடம்: பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை-1]

இது ஒரு ஒழுக்கநூல். புத்தர் அருளிய அறவுரைகளும், சங்கவிதிகளும், அவரைப் பற்றிய வரலாறுகளும் பௌத்த திருமுறைகளில் மூன்றுபிரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவைகளுக்குத் 'திரிபிடகங்கள்' என்று பெயர். அவை விநயபிடகம், சுத்த பிடகம் அபிதம்மபிடகம் எனப்படும். 'தம்மபதம்' என்பது சுத்தபிடகத்திலுள்ள ஐந்துபகுதிகளில் குத்தக நிகாயம் என்ற பகுதியிலுள்ளது. வடநாட்டு இந்துக்களுக்குப் 'பகவத் கீதை' எப்படியோ, தமிழர்க்குத் 'திருக்குறள்' எப்படியோ, அப்படித்தான் பௌத்தர்களுக்குத் 'தம்மபதம்' ஆகும். 'தம்மபதம்' பௌத்த சமயக்கொள்கைகளையும், வாழ்க்கைக்குவேண்டிய நீதிகளையும் எடுத்துக்கூறுகிறது. ஆசிரியர் இதனைத் தமிழில் தெளிவாக மொழியாக்கம் செய்துள்ளார். ஒத்த திருக்குறட்பாக்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டிச்செல்லும் ஆசிரியரின் திறன் போற்றத்தக்கதாகும்.

*   *   *

புதுவாழ்வு

[ஆசிரியர்: கி. ம. பக்தவத்சலம். பக். 126. விலை: ரூ 1-4-0. கிடைக்குமிடம்: முரசொலிப் பதிப்பகம், 131, பிராட்வே, சென்னை-1]

இது ஒரு கதைநூல். இது லோகோபகாரி இதழில் 'வெய்யிலும் நிழலும்' என்ற பெயரில் தொடர்ந்து ஆசிரியரால் வெளியிடப்பட்டு வந்ததாகும். முற்போக்கு எண்ணத்தோடு ஆசிரியர் இக்கதையைத் தீட்டித்தந்துள்ளார்.

அண்டசராசரம்

(49)

புராணகாரர்களுக்குப் பூமி ஒரு பாயைப் போலிருந்தது. அதனால்தான், இரண்யாட்சன் அதைச்சுருட்டி எடுத்துக்கொண்டு கடலுக்குள்போய் மறைந்துவிட அனுமதித்தார்கள். இரண்யாட்சனைக் கொன்று, பூமியை மீட்டுவர, விட்டுணு வராக அவதாரம் எடுத்தார். இரண்யாட்சனுடைய அண்ணனை இரண்யகசிபுவைக் கொல்ல, விட்டுணு நரசிம்ம அவதாரம் எடுத்தார். இரண்டுபேரும் அண்ணன் தம்பியராக ஒரே காலத்தில் இருந்த போதிலும், இருபத்திரண்டு அவதாரங்கள் கூறப்படும் வரிசையில், வராகஅவதாரம் இரண்டாவதாகவும், நரசிம்ம அவதாரம் பதினான்காவது அவதாரமாகவும் கூறப்பட்டுள்ளது. இடையில் பத்து அவதாரங்கள் வைக்கப்பட்டிருக்கிறது அவதாரங்களின் வரிசையில். ஆனால் புராணக்கதையில் இரண்யாட்சன் கொல்லப்பட்டதும் அடுத்தகாரியம் இரண்யகசிபுவைக் கொல்லப்பட்டதாக இருக்கும்.

இரண்யகசிபு, இரண்யாட்சன் இருவரும் பகவான் அவதாரம் எடுத்துக் கொல்லப்பட வேண்டிய பயங்கரவாதிகளாக ஆனபோதிலும், ஆரம்பத்தில் அவர்கள் வைகுண்டத்தில் ஜய, விஜய என்ற துவாரபாலகர்களாக இருந்தவர்கள். வைகுண்டத்தில் விட்டுணுவின் அரண்மனையில் ஒன்றையடுத்து ஒன்றாக ஏழுவாசற்படிகள் இருக்கும். கடைசியாக இருக்கும் ஏழாவது வாசற்படியில் ஜய, விஜய இருவரும் காவல்புரிந்து வந்தார்களாம். முக்கிய காவல்காரர்களாக இருந்ததால், அவர்கள் பட்டுப்பீதாம்பரங்களுடன் தலையில் நவரத்ன கிரீடம், காதுகளில் குண்டலங்கள், மார்பில் மணிமாலைகள் இவைகளுடன், வைகுண்ட அலங்காரங்களுக்கு ஒத்து இருந்தார்கள்.

ஒருசமயம் சனத்குமாரர் என்ற முனிவர்-பிரமபுத்திரர்களில் ஒருவர் - வைகுண்டத்தைக் காண்பதற்காக, தம்முடன்மூன்று முனிவர்களை அழைத்துக் கொண்டுவந்தார். இவர்கள் வைகுண்டத்தில் சுற்றிப்பார்த்து வருவதைப் பாகவதபுராணம் மிக ரசனையுடன் விவரிக்கிறது. பேரின்பமயமானது என்று சொல்லப்படும் வைகுண்டத்தில், சகலவை போகங்களும் குடிகொண்ருந்தனவாம். அழகின் உச்சமென்று சொல்லப்படுபவைகள் எல்லாம் அங்கே இருந்தனவாம். முக்தியடைந்த வைகுண்ட லோகவாசிகள் தங்கள் தங்கள் பிரியசகிகளுடன் உலவினார்களாம் பூக்களிலிருந்து சொட்டுகிற தேனை அள்ளிக் கொண்டு தென்றல் உலவியதாம். தேனீக்கள் அரியின் நாமத்தைப் பாடிக்கொண்டு வந்தனவாம். குயில், புறா, கொக்கு, வாத்து, கிளி, அன்னப்பறவை, மயில் ஆகிய பல்வகைப் பறவையினங்கள் குரலெழுப்பும், பாரிசாதம் ஆகிய பல தெய்வமலர்கள் வாசனை வீசிக் கொண்டிருந்தன. மண்டபங்களில் வைடூரியம், கோமேதகம், பொன் முதலிய மின்னும அங்கு வலிவானஉடலும். புனமுறுவல் பூத்தமுகமும் உடையபெண்கள் இருந்தனராம். ஆனால் அவர்கள் புன்முறுவல்கள் வைகுண்டத்திற்கு வந்துள்ள பக்தர்கள் மனதில் மயக்கமுண்டாக்காதாம்.

இவ்வாறெல்லாம் வர்ணிக்கப்படும் வைகுண்டத்தில் சனத்குமாரரும் மற்றமூன்று முனிவர்

களும் வந்தார்கள். வைகுண்டத்தின் வர்ணனை தரப்பட்டதேயன்றி இந்த நான்கு பேர்களைப்பற்றி வர்ணனை அதிகம் சொல்லப்படவில்லை. அந்த நான்கு முனிவர்களும் முழு நிர்வாணத்தில் இருந்தார்களாம்!

அணிமணிகள் பட்டுப்பீதாம்பரங்களணிந்து வைகுண்டவாசிகள் தேவர்கள் தேவமாதர்கள் எல்லோரும் இருந்தார்கள். அவர்கள் மத்தியில் பிறந்த மேனியில், நான்கு முனிவர்கள் சென்றார்கள். கும்பமேளாவில் நாகமுனிவர்களைச் சூழ்ந்து பெரிய கூட்டம் சேர்ந்ததல்லவா; அதைப்போல, சனத்குமாரரும் மூன்று முனிவர்களும் சென்றபொழுது கூட்டங் கூடியதா அல்லவா என்பதைப்பற்றி புராணம் ஒன்றும் சொல்லவில்லை.

நிர்வாணக் கோலத்தில் நான்கு முனிவர்களும் வைகுண்டத்தில் முதல் ஆறுவாசல்களையும் கடந்து வந்தார்கள். அவர்களை யாரும் தடுக்கவில்லை. ஒவ்வொருவாசலும் மிக அலங்காரமாக இருந்ததாம். கதவுகள் தங்கத்தால் மூடப்பட்டு, அவற்றின்மீது வைரங்கள் பதிக்கப்பட்டிருந்தனவாம். ஆறு வாசல்களைக் கடந்து சனத் குமாராதி முனிவர்கள் ஏழாவது வாசலுக்கு வந்தார்கள். அந்தவாசலைக் கடந்தால், விட்டுணு இருக்குமிடம், விட்டுணு திருக்கோலத்தை நேரில் தரிசிக்கலாம். ஆனால் இந்த நான்கு முனிவர்களின் திருக்கோலத்தையும் பார்த்த துவாரபாலகர்கள், உள்ளே போகவிடாமல் தடுத்துவிட்டார்கள்.

அப்பொழுது விட்டுணுவும் இலக்குமியும் தாமரை பூத்த ஓடைக்குப்பக்கத்தில் சரசமாக அமர்ந்திருந்தார்கள். இலக்குமி ஒரு தாமரை மலரைப் பறித்து, விளையாட்டுக்காக விட்டுணு மீது வீசினாள். அவள் காலிலிருந்த சதங்கைகள் கலகலவெனச் சத்தமிட்டன. இருவரும் சிரித்தார்கள். மேலே சொன்ன நந்தவனக்காட்சியை விவரித்த புராணக்காரர் பின் தாமரை ஓடைத்தண்ணீரைப் பார்க்கிறார்.

இலட்சுமி தண்ணீரில் பார்த்தாளாம். அவளுடைய அழகிய தோற்றம், அசைந்தாடும் மயிர்ச்சுருள்கள், அழகிய மூக்கு, மலர்ந்த முகம் அங்கிருப்பதுபோலத் தெரிந்ததாம். அப்பொழுது விட்டுணுமூர்த்தி முத்தமிடுவதுபோலத் தெரிந்ததாம்.

இந்தக் காட்சி தண்ணீரில் தெரிந்தது.

சினிமாப்படத்தில் காதலனும் காதலியும் அமர்ந்திருக்கும் காட்சியில், தண்ணீரில் பிரதிபிம்பமாகக் காட்டுவார்கள். பாகவத புராணகாரர் அந்தக்காலத்திலேயே, இலக்குமியை விட்டுணுமூர்த்தி முத்தமிடுவதான கற்பனையைத் தண்ணீரில் காட்டினார்.

இவ்வாறாக விட்டுணுவும், இலக்குமியும் நந்தவனத்தில் இருக்கிறார்கள். நான்கு நிர்வாண முனிவர்கள் உள்ளே போகவேண்டுமென்று வாசற்படியில் நிற்கிறார்கள். துவாரபாலகர்கள் எப்படி அனுமதிப்பார்கள்?

இலட்சுமி திருமால் இவர்கள்முன் நிர்வாணமாயிருக்கிறவர்களை அனுமதிக்கலாமா? அதிலும் இப்பொழுது இலட்சுமியும், திருமாலும் ஏகாந்தமாக நந்தவனத்தில் இருக்கிறார்கள். இந்த நான்கு முனிவர்களையும் உள்ளே அனுமதித்தால், அவர்கள் உள்சென்றதும் நிர்வாணமாயிருப்பவர்களின் தொகை ஆறு என்று உயர்ந்துவிட்டால் என்னசெய்வது? ஆக துவாரபாலகர்கள் சனத்குமாரமுனிவரையும் அவருடன் வந்த மூன்று முனிவர்களையும் உள்ளே போகவேண்டாமென்று தடுத்துவிட்டார்கள்.

நிர்வாண முனிவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. "எங்களைத்தடுத்த நீங்கள் இருவரும், வைகுண்டத்தைவிட்டுப் பூலோகத்தில் போய் பிறப்பீர்களாக!" என்று அவர்கள் சாபங் கொடுத்தார்கள்.

அவர்களுடைய சாபத்தைக்கண்டு அஞ்சி, துவாரபாலகர்கள் இருவரும் கீழே விழுந்து கால்களைப் பிடித்துக்கொண்டு "முனிவர்களே! எங்களுடைய குற்றத்துக்குத் தகுந்த தண்டனைதான்! கீழ் உலகத்தில் அரிநாமத்தை நாங்கள் மறவாதிருக்க வரந்தாருங்கள்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

வாயிலில் நடக்கும் சச்சரவைக்கேட்டு, பரமாத்மா தனது அணிமணிகளைச் சரிசெய்து கொண்டு வெளியில்வந்தார்.

நான்குமுனிவர்களும் விட்டுணுவின் திவ்யக்கோலத்தைக்கண்டு ஆனந்தமடைந்தார்கள்.

சிறிதுநேரத்துக்கெல்லாம் இலட்சுமி தேவியும் வெளியில்வந்து காட்சியளித்தாள்.

முனிவர்களின் ஆனந்தத்திற்கோர் அளவில்லை. முனிவர்களின்முன் நடுங்கிக்கொண்டு நிற்கும் துவாரபாலகர்களைப் பார்த்து, பரமாத்மா அவர்களின் போக்கைக் கண்டித்தார். அதுமட்டுமல்லாமல், பிராமணர்களின் அருமைபெருமைகளைப் பற்றியும், பகவான் சொல்ல ஆரம்பித்தார்.

துவாரபாலகர்களுக்குச் சொல்வதுபோல உலகத்தவர்களுக்கு விட்டுணு சொல்லும்

துகையில், அது இருக்கிறது. பாகவதம் 3 வது காண்டம் 16 வது அத்தியாயத்தில் பிராமணர்களின் பெருமை சொல்லப்படுகிறது.

விட்டுணு சொன்னாராம் "ஓ துவாரபாலகர்களே! நீங்கள் பெரிய குற்றம் செய்துவிட்டீர்கள். இந்தமுனிவர்கள் உங்களுக்குத் தந்த தண்டனை சரியானதென ஒப்புக்கொள்கிறேன். பிராமணர்கள்தாம் எனக்குப் பிடித்தமான உயர்ந்த தேவர்கள். அவர்களை அவமதித்தது என்னை அவமதித்ததாகும். பிராமணர்களுக்குச் செய்யப்படும் சேவை எனக்குச் செய்யப்படுவதைவிட மேலானது. பிராமணன் ஒருவன் நன்றாகச் சாப்பிட அவன் வாயிலிருந்து நெய்யொழுகினால் அது கண்டு நான் அடையும் திருப்தி, யாகங்களில் அக்கினி வாயிலாகத் தரப்படும் அவிர்ப்பாகங்களால் அடையும் மகிழ்ச்சியைவிட மேலானது. என்னுடைய அம்சமான பிராமணர்களை விரோதமாகப்பார்க்கிறவர்கள் யமதூதர்களால் பிடிக்கப்பட்டு, இரும்புக் கொக்கிகளால் உடல் சிதைக்கப்பட்டு, தண்டிக்கப்படுவார்கள். பிராமணர்கள் எவ்வளவு கடுமையான வார்த்தைகளைச் சொன்னாலும், அவற்றை இதமாக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடனும் அன்புடனும் மலர்ந்தமுகத்துடன்யார்யார் அந்தபிராமணர்களிடம் பதில் தருகிறார்களோ, அவர்கள் என் பிரீதிக்கு உரியவர்களாவார்கள். இந்தமுனிவர்களைச் சரியானபடி வரவேற்காத நீங்கள் இருவரும் கீழ் உலகத்துக்குப்போய், திரும்ப என்னிடம் வாருங்கள்.

பிராமணர்களின் அருமை பெருமைகளை விட்டுணு சொன்னதும்-புராணக்காரர் சொன்னதும்-பிராமணமுனிவர்கள் மிகமகிழ்ச்சியுடன் வைகுண்டம் விட்டு வந்தார்கள். துவாரபாலகர்கள் இருவரும்வைகுண்டத்தைவிட்டுக்கீழே விழுந்தார்கள். பிராமணர்கள் இட்டசாபத்தை யாரும் தவிர்க்கமுடியாதாம்! கீழே விழுந்த இருவரும் காசிபரின் தேவியான திதியின் வயிற்றில்தங்கி, அசுரர்களாகப் பிறந்தார்கள். இருவரும் அசுரராகப் பிறந்ததற்கு பாகவத புராணம் மற்றொரு கதையைத் தருகிறது.

காசிபருடையசிற்றப்பாமகள் திதி. ஆனாலும் அவள் காசிபருடைய மனைவியானாள். திதி மட்டுமல்ல அவளுடைய பன்னிரண்டு தங்கைகளும் காசிபருக்கு மனைவியானார்கள். பதின்மூன்று மனைவிகளை அடைந்த காசிபரோ தவ முனிவர்!

ஒருநாள் மாலை காசிபர் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது திதி அங்கு வந்து அவரருகில் உட்கார்ந்தாள். பக்கத்தில் பெருமூச்சு வருவது உணர்ந்து, முனிபுங்கவர் கண்திறந்தார், பத்தினி அருகில் இருந்தாள்.

அவளுடைய பார்வையே அவள் வந்ததன் காரணத்தைத் தெரிவித்தது.

"என்ன?" என்று காசிபர் கேட்டார்.

"சுவாமி! மன்மத பாணம் பட்டு நான் மிகவும் அவதிப்படுகிறேன். என் விருப்பத்தை நிறைவேற்றுங்கள்!" என்று திதி கேட்டாளாம்.

காசிபர் அவள் பேச்சைக் கேட்கவில்லை. முற்றும் துறந்த முனிவராயிற்றே! ஆசாபாசங்களின் அவல நிலையைச் சொல்லி, காமக்குரோதாதிகளைவிலக்கும்படி அவர் செய்தாரா என்றால் இல்லை. "ஓ! மாதுசிரோமணியே! உன்விருப்பத்தைப் பூர்த்திசெய்யச் சித்தமாயிருக்கிறேன். இன்னும் ஒரு மணி நேரம் பொறுத்துக்கொள்! இந்த அந்திநேரத்தில் சிவனும் பூதகணங்களும் உலாவிவருகிறார்கள் ஆதலால் சிறிதுநேரம் செல்லட்டும்!" "என்று காசிபர் அவளுக்குச் சமாதானம் சொன்னார்.

குருபத்தினி சமாதானமடையவில்லை. "காமவேதனை தாங்காதவளாய், அவள் சாதாரணப் பெண்ணுக்குள்ள வெட்கத்தையும் விட்டவளாய், பிராமணசிரேஷ்டரான காசிபரைப் பற்றி இழுத்தாள், மேல்விழுந்து ஆடைகளை அலங்கோலமாக்கினாள். மனைவியின் பிடிவாதத்தைக்கண்ட காசிபர், தெய்வத்தின ஆணைப்படி எல்லாம் நடக்கிறதென்று அவளுடன் தனியாகப் பர்ணசாலைக்குள் சென்றார். (பாகவதபுராணம். 3 வது காண்டம், 14 வது அத்தியாயம்)

காமவலையில் தள்ளப்பட்டு "பாவத்தைப்" புரிந்தபின், காசிபர் நீராடி, வேதமந்திரங்களைச் சொல்லிக்கொண்டு தியானத்தில் அமர்ந்திருந்தார். தான் செய்தது பாவமான காரியம் என்று திதிக்கு அப்பொழுதுதான் தெரிந்ததாம். தனது வயற்றிலிருக்கும் கருவுக்கு ஏதேனும் தீங்குவிளையுமோ என்ற அச்சத்தில் அவள் காசிபரை அணுகி வேண்டிக்கொண்டாள். காசிபர் தம் சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு, திதியைப்பார்த்து "ஓ அபசகுனமுள்ளபெண்ணே! உன்மனம் குற்றத்துடனிருந்ததாலும், நேரம் மிகக் கெட்டநேரமானதாலும், நீ என் கட்டளையையும் கடவுள்களின்விருப்பத்தையும் மீறி நடந்துகொண்டதாலும், இரண்டுபிள்ளைகள் பிறப்பார்கள். அவர்களுடைய கொடும் செயல்களால் மூன்று

உலகங்களும் வருந்தும். பின்பு பகவான் அவதாரமெடுத்து அவர்களைக் கொன்றுவிடுவார்!" என்று சொன்னார்.

திதி முதலில் மிகவும் மனங்கலங்கினாலும், "விட்டுணுவின் கைகளில் அவர்கள் செத்து விடுவது எவ்வளவோ நல்லது!" என்று சமாதானமடைந்தாள்.

"பத்தினியே! நீ செய்த பாவத்தை நினைத்து, நீ உண்மையாக மனம் வருந்துவதால், உன்னுடைய இரண்டுபிள்ளைகள் மிகக் கொடியவர்களாக இருந்தபோதிலும் மூத்த பிள்ளையின் மகன் தேவாதி முனிவர்களால் போற்றப்படுபவனாகப் பிறப்பான். அதனால் உன்குலம் பெருமையடையும்" என்று காசிபர் உரைத்தார்.

வைகுண்டத்திலிருந்து தள்ளப்பட்ட ஜய, விஜய இருவரும் திதியின் கர்ப்பத்தில் கலந்து விட்டார்கள். நூறு ஆண்டுகள் கர்ப்பத்தைத் தாங்கியிருந்து, பின் திதி இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். அவர்களே இரண்ய கசிபு இரண்யாட்சன் இருவருமாவார்கள்.

சிவனை உயர்த்திக்கூறும் லிங்கபுராணத்தில் வராகமூர்த்தி இரண்யாட்சனைக் கொன்றதும், கோபம் தணியாமல் அண்டங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆமையுடன் சண்டைக்குச் சென்றாராம். ஆமையைக்குத்தி அசைத்த பொழுது அண்டங்களெல்லாம் அசைந்தனவாம். தேவர்கள் ஓடிப்போய் சிவனிடம் முறையிட்டுக் கொண்டார்களாம். சிவபெருமான் வந்து, வராகத்தை அடக்கி அதன் கொம்பை ஒடித்து, தன் மாலையில் அணிந்து கொண்டாராம். கர்வமடங்கி வராகம் திரும்பியது. இது விட்டுணுவைவிட சிவன் பெரியவர் என்பதற்காக சிவப்பிரியர்கள் எழுதி வைத்திருப்பதாகும். எல்லாப்புராணங்களும் கற்பனை தான். அதில் ஒரு கற்பனைமிஞ்சுமளவு மற்றொரு கற்பனை எழுதுகிறது. பூமியை இரண்யாட்சன் தூக்கிக்கொண்டு போய்விட்டானென்றதும் தேவர்கள் பிரமா சிவன் எல்லோரும் விட்டுணுவிடம்போய் முறையிட்டுக் கொண்டனர். விட்டுணு அவர்களைக்காப்பாற்றினார் என்று வைணவ பாகவதர் சொல்லுவார். இருந்தாலும், கடைசியாக வராகத்தின் கர்வத்தை அடக்க சிவன் அதன் கொம்பை ஒடித்தார் என்று சிவபுராணிகர் சொல்லுவார்.

இரண்யாட்சனைக் கொன்றுவிட்டு, வராகமூர்த்தி பூமியை மீட்டு வருகிறார். அதுவரை பூமியைப்பற்றி ஒன்றும் அதிகம் சொல்லாத புராணிகர்—அதுவரை பூமி வெறும மண் என்ற அளவில் கவனிக்கப்பட்டது—வராகமூர்த்தித் தூக்கிவரும்பொழுது ஒரு பெண்ணைப்பற்றி—பூமிதேவியைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்து விடுகிறார். பூமி பூமாதேவி ஆகி விடுகிறாள்.

"அவர் (விட்டுணு) பூமியைப் பார்த்தார். அவளைக் கெட்டியாகத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டார்."

தன்னைக் காப்பாற்றிய வராகத்திடம் பூமாதேவிக்கும் நன்றியறிதலான பிரியம் உண்டாயிற்று. வராகமூர்த்திக்கும் பூமாதேவிக்கும் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை நரகாசுரன் எனப் பெயர் பெற்றது. தந்தை விட்டுணு, தாய் பூமாதேவி; இருந்தாலும் குழந்தைமட்டும் அசுரனாக இருக்கிறது. தேவரும் அசுரர்களும் வெவ்வேறு குலத்தவர்கள், வேறுவிதமான தோற்றத்தவர்கள், நிறத்தவர்கள், குணத்தினர். ஆனாலும் தேவர் குலத்தைச் சேர்ந்த இருவருக்கும் பிறக்கும் குழந்தைமட்டும் அசுரர்களைப்போல இருக்கும். ஒரு வீட்டில் கணவன் மனைவி இருக்கிறார்கள், ஆனால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை உருவத்தில், நிறத்தில், பண்பில் மூன்றுவது வீட்டிலிருப்பவனைப் போலிருக்கிறதென்றால்... இதைப்போல பல பிறப்புகள்—தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மாறுபட்ட தோற்றமுடைய குழந்தைகள் பல பிறந்த கதைகள் புராணங்களில் ஏராளமாக இருக்கின்றன.

நரகாசுரன் பிறப்பில் தந்தை விட்டுணுவாகவும், தாய் பூதேவியாகவும் இருந்தபோதிலும், அப்பொழுது விட்டுணு வராகஅவதாரமாகவும், பூதேவி பூமியாகவும் இருந்தார்கள் என்று கூறப்படலாம், விட்டுணுவுக்கும் பூதேவிக்கும் பிறந்தது என்பதைவிட, 'வராகத்திற்கும் (பன்றிக்கும்) பூதேவிக்கும் குழந்தை பிறந்ததென்பது எவ்விதத்திலும் பொருந்துவதல்ல. ஆனால் புராணகாரரின், அபூர்வ கற்பனைகளில்ஒன்று!

நரகாசுரன் பூமியின் மகனானதால் பௌமன் என்றும் அழைக்கப்பட்டான். இவன் 'பிராக் சோதிடம்' என்ற பட்டணத்திலிருந்து ஆண்டு கொண்டிருந்தான். வருணனிடம் சண்டையிட்டு அவன் குடையைப் பிடுங்கிக்கொண்டதுடன், காசிபரின் மனைவியான அதிதியிடமிருந்து (இரண்யாட்சன், இரணிய கசிபு இவர்களைப்பெற்ற திதியின் தமக்கை, சகக்கிழத்தியும்கூட) காதணிகளைக் கவர்ந்து கொண்டானும். இவன்செய்யும் கொடுமைகள் பொறுக்காமல் தேவர்கள் முனிவர்கள் முறையிட, விட்டுணு கிருஷ்ண அவதாரத்தில் நரகாசுரனைக் கொனறார்.

நரகாசுரன் கொல்லப்பட்டதைப்பற்றியும், அதிலிருந்து தீபாவளி கொண்டாடப்பட்டது பற்றியும் கதைகள் இருக்கின்றன.

நரகாசுரன் வரம்பெற்றபொழுது சாவா வரம் கேட்டானும். அது முடியாதெனக் கடவுள் சொல்லிவிட, தன்தாய் தவிர வேறுயாரும் தன்னைக் கொல்லாதிருக்க வரங்கேட்டானும். அதைத் திருமால் தந்தாராம். பின் கிருட்டிணவதாரத்தில், கிருட்டிணன் நரகாசுரனுடன் சண்டைக்குப் போகும்பொழுது, சத்தியபாமாவையும் துணையாக அழைத்துப் போனாராம். சத்தியபாமா பூதேவியின் அவதாரம். சண்டையில் கண்ணன் எவ்வளவோ முயன்றும் நரகாசுரனைக்கொல்ல முடியாமல் களைத்து விழுந்துவிட, தேர்ப்பாகனை இருந்த சத்தியபாமா கணவனுக்கு உதவியாக, வில்லையெடுத்து அம்பை விடுகிறாள். அம்பு நரகாசுரன் மார்பில் பாய்ந்துவிடுகிறது. தன்னைக் கொல்வது வேறுயாராகவும் இருக்கமுடியாது என்று "ஐயோ! அம்மா" என்று நரகாசுரன் கூவிக்கொண்டு விழுந்தானும். உடனே பாமா ஓடிப்போய் மகனைப்பார்த்துப் புலம்பினாளாம். கண்ணன் அவளைச் சமாதானப்படுத்தினாராம். இறப்பதற்கு முன்னதாக, "நான் இறந்த இந்நாளை எல்லோரும் விமரிசையாகக் கொண்டாடவேண்டும்" என்று நரகாசுரன் கேட்டுக்கொண்டானும். அதன்படி தீபாவளிப்பண்டிகை கொண்டாடப்படுகிறதாம். இந்தக்கதைக்குப் புராணத்தில்கூட ஆதாரம் கிடையாது. முதலாவதாக, நரகாசுரனைக் கொன்றது சத்தியபாமா அல்ல. கிருட்டிணன் கொன்றதாகத்தான் பாகவத புராணம் கூறுகிறது. கிருட்டிணன் திருவிளையாடல்களை அதிகமாகக் கூறுவது பாகவத புராணம். அதில் 10-வது காண்டம், 59-வது அத்தியாயத்தில் நரகாசுரன் கொல்லப்பட்டது கூறப்படுகிறது.

நரகாசுரன் செய்யும் கொடுமைகளைப்பற்றி இந்திரன் குறையிட்டுக்கொண்டதும், கிருட்டிணன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு, கருடன்மேல் அமர்ந்து (தீபாவளிக்கதையில் வருவதைப்போல, தேரில் போகவில்லை) நரகாசுரன் பட்டினத்துக்குப் போகிறார். சண்டையில் நரகாசுரனின் படைத்தலைவர்கள், மகன் சுற்றம் எல்லோரும் அழிந்துபட, கடைசியாக நரகாசுரனே சண்டைக்கு வருகிறான். அவனது வில், அம்புகள், கதைகள் எல்லாவற்றையும் கிருட்டிணன் துண்டித்துவிடுகிறார்.

"முன் முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட, பௌமன் சூலத்தை ஏந்தி அச்சுதனைக் கொல்லவந்தான். அவன் சூலத்தை எறிவதற்குமுன், அரி தனது சக்கரத்தை வீசி நரகாசுரனின் தலையை வெட்டிவிட்டார்."

நரகாசுரனைக் கொன்றது, கிருட்டிணன் என்று பாகவத புராணம் கூறுகிறதேயன்றி, தீபாவளிக் கதையில் வருவதுபோல சத்தியபாமா கொன்றதாகக் கூறவில்லை. நரகாசுரனைக் கொன்றதும், பூதேவி கிருட்டிணன் முன் மண்டியிட்டு, "ஓ, பிரபு! வராக உருவத்தில் வந்து நீங்கள் என்னைத் தூக்கிவந்தபொழுது, உங்களுடைய திவ்ய தொடர்பால், இந்தப் பிள்ளை பிறந்தான். நீங்கள் அவனை எனக்கு அளித்தீர்கள், இப்பொழுது நீங்கள் அவனைக் கொன்றுவிட்டீர்கள். இதோ! அவனுடைய மகன்—உங்களுடைய பேரன் இருக்கிறான் அவனை ஆசீர்வதியுங்கள்" என்று மகனையிழந்த தாய், மிகவும் புகழ்ச்சியுடன் வேண்டிக்கொண்டாளாம். நரகாசுரனின் மகனைக் கிருட்டிணன் ஆசீர்வதித்து, அரண்மனைக்குள் சென்றாராம்.

அங்கு பதினாறாயிரம் (16000) பெண்கள் இருந்தார்களாம். "அந்தப் பெண்கள் எல்லோரும், நல்ல யௌவனப் பருவத்தில், நன்றாக அலங்கரிக்கப்பட்டு, கவர்ச்சிகரமான உடற்கட்டுடன் இருந்தார்கள்." (பாகவத புராணம் சொல்லுகிறது அவ்வாறு) கிருட்டிணன் அவர்களுக்கு ஆதரவு காட்டி, பல்லக்குகளில் உட்காரச் செய்து, துவாரகைக்கு அந்தப் பதினாறாயிரம் பெண்களையும் அனுப்பிவைத்தார். கிருட்டிணன் துவாரகைக்குத் திரும்பியதும், கேட்கவேண்டுமா? அவருடைய அந்தப்புரத்தில் பதினாறாயிரம் பெண்கள் கூட இருந்தார்கள்!

பாகவத புராணத்தில் நரகாசுரனின் தாயான பூதேவியும், கண்ணனின் மனைவியான சத்தியபாமாவும் வெவ்வேறாகக் காட்டப்படுகிறார்கள். நரகாசுரனைக் கொன்றதும், கிருட்டிணன் அரண்மனைக்குள் சென்றபொழுது, அங்கு விலையுயர்ந்த காணிக்கைகளுடன் பூதேவி காத்திருந்ததாகக் கூறப்படுகிறது. தீபாவளிக்கதை பிற்காலத்தில் எழுந்த கதைகளில் ஒன்றேதவிர, புராணத்தில் இல்லாததொன்று. பாகவத புராணத்தில் அந்தக் கதை இல்லை. நரகாசுரனைக் கிருட்டிணன் கொன்று பதினாறாயிரம் பெண்களையும் திரண்ட செல்வத்தையும் துவாரகைக்கு எடுத்துச்சென்ற சம்பவம் அல்லாமல், பாமா விஜயங்களில் வருகிற நரகாசுரவதைப்படலம் தீபாவளிக்கதை, பாகவத புராணத்தில் இல்லை.

வராக அவதாரத்தின் விளைவு, கிருட்டிணவதாரத்தில் தீர்க்கப்படவேண்டியதாயிற்று புராணம் அத்துடன் நின்றுவிடுகிறது.

வெற்றுத் தோட்டா!

பட்டுக்கோட்டையில், தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள், சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை மிகத்தீவிரமாகப் பரப்பிவந்த தொடக்க நாட்களில் அவருக்குப் படு எதிரியாகஇருந்து அவருக்குப் பலதொல்லைகள் கொடுத்துவந்தவர் காலஞ் சென்ற தோழர் வி. நாடிமுத்துப்பிள்ளை ஆவார்.

தோழர் வி. நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் பெரும் பணக்காரர். அவரிடம் பணபலம், படைபலம் ஏராளமாக இருந்தன. வறுமையிலும், ஏழ்மையிலும் உழன்ற தோழர் அழகிரிசாமி அவர்களுக்கு அவர் எல்லாவிதத் தொல்லைகளையும் கொடுத்து வந்தார். தோழர் அழகிரிசாமி அவர்கள் அவற்றையெல்லாம் சிறிதுகூடப்பொருட் படுத்தாமல், அஞ்சாநெஞ்சத்துடன், தம் நாவன்மையால் இளைஞர்பட்டாளத்தைத் திரட்டித் தம் பக்கம் வைத்துக்கொண்டு அரும்பணி ஆற்றிவந்தார்.

தோழர் அழகிரிசாமி அவர்களின் சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து, வாதத்திற்கு வாதம் நேரியமுறையில் எதிராக எடுத்து வைக்கமுடியாத தோழர் நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் சில்லரை ஆட்களை ஏவிவிட்டுத் தோழர் அழகிரிசாமியைப் பொதுக்கூட்டத்தின் மூலமும், துண்டு அறிக்கைகள் மூலமும் இழித்தும் பழித்தும் கூறச்செய்துவந்தார்.

ஒருமுறை தோழர் அழகிரிசாமியைப்பற்றி இழிவான,தாக்கும் முறையில் துண்டு அறிக்கை ஒன்று தோழர் நாடிமுத்துப்பிள்ளை அவர்களால் அடிக்கப்பட்டது அந்தத்துண்டுஅறிக்கை அச்சியற்றப் பட்டுக்கொண்டிருக்கும் போதே, ஒரு அறிக்கைத்தாள் தோழர் அழகிரிசாமி அவர்கள் கைக்குக்கிட்டியது. அன்று தோழர் அழகிரிசாமி அவர்களின் பொதுக்கூட்டம் ஒன்று இருந்தது. தோழர் நாடிமுத்துப் பிள்ளை துண்டுஅறிக்கைகளை வெளியிடுவதற்கு முன்பே, தோழர் அழகிரிசாமி தம் கையில் அகப்பட்ட அந்த அறிக்கையை எடுத்துக்கொண்டு பொதுக்கூட்டத்திற்கு வந்தார்.

பொதுக்கூட்டத்தில் அவர் பேசும்போது, " நாளை தோழர் நாடிமுத்து அவர்களால் வெளியிடப்படப்போகிற என்னைப்பற்றிய அறிக்கையை நானே இன்று உங்களிடம் படித்துக்காண்பிக்கிறேன் " என்று சொல்லிப் படித்துக்காட்டினார். அதில் அவரைப்பற்றி இழித்துக் கூறப்பட்டிருந்த வைகளிலே " அழகிரிசாமி ஒரு வெற்றுத் தோட்டா " என்பதும் ஒரு சொற்றொடராகும்.

இழிவாகக் கூறியவர்களுக்கு இழிவான முறையிலேயே பதில் கொடுக்க வேண்டும் என்று சற்று ஆத்திரங்கொண்ட தோழர் அழகிரிசாமி, " என்னை ஒரு வெற்றுத் தோட்டா என்று சொல்லி தோழர் நாடிமுத்து இழித்துக் கூறியுள்ளார். எனக்கு ஒரு மனைவியும் மூன்று மக்களும் உண்டு. தோழர் நாடிமுத்து அவர்களுக்கு மூன்று மனைவிமார்கள் உண்டு, ஆனால் ஒரு பிள்ளைகூட இல்லை. இப்பொழுது அவர் கூறட்டும் யார் வெற்றுத் தோட்டா என்று?" என்று கேட்டவுடன் கூட்டத்தில் பெருத்த கையொலியும். ஏளனச்சிரிப்பொலியும் தொடர்ந்து சில விநாடிகள் எழுந்தன.

இந்தப்பேச்சைக் கேட்டறிந்த தோழர் நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் வெட்கப்பட்டு அந்தத்துண்டு அறிக்கைகளைப் பிறகு வெளிப்படுத்தாமலேயே இருந்துவிட்டார். அப்பொழுது அவர் மூன்று மனைவிமார்களைக் கொண்டிருந்தார். ஆனால் குழந்தை ஏதும் இல்லாமலிருந்தார்.

Regd. M 6296

“மன்றம்”

மலர் - 4. 1955 - 56

24 இதழ்கள் கொண்ட உயர்ந்த காலிகோ பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்

(இத்துடன் 1956 பொங்கல் சிறப்பிதழும் இணைக்கப்பட்டிருக்கிறது)

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு ரூ. 2-0-0)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 12 வீதம் அனுப்பவேண்டும்)

விபரங்கட்கு:

“மன்றம்”
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

“மன்றம்” அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.